விலை ரூபா: 15.00

பொதுசன நூலகம்


Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதின்னான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 03 ஞாயிற்றுக்கிழமை (15.02.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 058




# இலங்கைக்கு ஐ.நா. படையை அனுப்பும் காலம் நெருங்கிவிட்டது

## பான் கீ மூனிடம் ஐரோப்பிய ஒன்றியம் வேண்டுகோள்



(கொழும்பு)

இலங்கையில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதை தடுப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப்படையை அங்கு அனுப்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்றத்தின் தெற்காசியப் பிராந்தியத்துக்கான நாடாளுமன்றக் குழுவின் தலைவர் ரொபேர்ட் இவான்சே தெரிவித்துள்ளார். இது தொடர்பாக ஐ.நா. செயலாளர் பான் கீ மூனிடம் அவர் வலியுறுத்தியுள்ளார். (14 ஆம் பக்கம் பார்க்க)



அன்புச்சோலை முதியோர் இல்லம் மீது மேற்கொள்ளப்பட்ட தாககுதலில் காயமடைந்தோர்...

## பிரி.பிரதமரின் வீட்டின் முன் ஈழத்தமிழர் தீக்குளிப்பு!

(லண்டன்)

லண்டன் டவுனிங் தெருவிலுள்ள இங்கிலாந்து பிரதமர் கோர்டன் பிறவுண் வீட்டுக்கு முன் ஈழத்தமிழருக்காக லண்டன் வாழ் ஈழத்தமிழர் ஒருவர் தீக்குளித்ததாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஜெனீவாவிலுள்ள ஐ.நா. அலுவலகம் முன்பு லண்டன் வாழ் ஈழத்தமிழர் முருகதாசன் தீக்குளித்து இறந்த துயர் நீங்குவதற்குள் அடுத்து இப்படியொரு தகவலை இங்கிலாந்தில் இருந்து ஒளிபரப்பாகும் தீபம் தமிழ்த் தொலைக்காட்சி தெரிவித்துள்ளதால் (14ஆம் பக்கம் பார்க்க)

# வன்னியில் நேற்று எறிகணைத் தாக்குதல் 101 வயது முதியவர் உட்பட 55 பேர் பலி

## மேலும் 109 பேர் படுகாயம்

(கொழும்பு)

வன்னியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட வான் மற்றும் பீரங்கித் தாக்குதல்களில் நான்கு வயோதிபர்கள் உட்பட 55 பொதுமக்கள் உயிரிழந்ததுடன் 109 பேர் படுகாயமடைந்துள்ளனர் என தகவல்கள் தெரிவித்தன.

அன்புச்சோலை முதியோர் இல்லத்தின் மீது நேற்று சனிக்கிழமை வீழ்ந்து வெடித்த பீரங்கிகளால் அங்கு பராமரிக்கப்பட்டு வந்த 4 வயோதிபர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 5 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

வள்ளி ஆச்சி (வயது 99), கறுப்பையா (வயது 101), பொன்னம்மா (வயது 80), இளையபிள்ளை (வயது 86) ஆகியோர் கொல்லப்பட்டுள்ளனர்.

வேலாச்சி (வயது 97) செல்லையா (வயது 98), பழனி (வயது 79), கிருஸ்ணன் (வயது 80), இராஜேஸ்வரி (வயது 67), பராமரிப்பாளரான கருணாகரன் (வயது 35) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பு மற்றும் (14ஆம் பக்கம் பார்க்க)

# விசேட பிரதிநிதி நியமனம் ஒருதலைப்பட்சமானதல்ல!



## பிரிட்டன் விளக்கம்

(கொழும்பு)

இலங்கைக்கான விசேட பிரதிநிதி நியமனம் ஒருதலைப்பட்சமான நடவடிக்கை அல்ல என பிரிட்டன் தெரிவித்துள்ளது. இலங்கையின் மனிதாபிமான நிலைவரம் குறித்து ஆராய்வதற்காகவே தாம் விசேட பிரதிநிதி ஒருவரை நியமித்ததாக பிரிட்டன் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்துடன் தற்போதைய நிலைவரம் குறித்து கலந்துரையாடப்பட்டதன் பின்னரே இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டதாகப் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இலங்கைக்கு விசேட பிரதிநிதி ஒருவரை நியமிப்பதற்கான காரணம் குறித்து பிரிட்டன் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இலங்கைக்கு (14ஆம் பக்கம் பார்க்க)

## சிறப்புத் தூதுவரின் நியமனம் புலிகள் வரவேற்பு

(முல்லைத்தீவு)

இங்கிலாந்து சிறப்புப் பிரதிநிதியின் நியமனத்தை விடுதலைப்புலிகள் வரவேற்றுள்ளனர். இலங்கையில் போரை முடிவுக்கு கொண்டு வருவதில் இங்கிலாந்து தலையிட்டு பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்று புலிகளின் சர்வதேசத் தொடர்பாளர் எஸ்.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

ஈழத்தமிழர்களுக்கு உதவ சிறப்பு தூதராக டெஸ் பிறவுண் என்பவரை இங்கிலாந்து பிரதமர் கோர்டன் பிறவுண் நியமித்தார். இந்த தூதரை விரைவில் இலங்கைக்கு அனுப்ப இங்கிலாந்து முடிவு செய்தது.

இங்கிலாந்தின் (14ஆம் பக்கம் பார்க்க)

# வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத மனித அவலம் வன்னியில் நடக்கிறது

## முல்லை. வைத்திய அதிகாரி கவலை

(லண்டன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் விடுவிக்கப்படாத பிரதேசங்களில் மோதல்களில் சிக்கி காயமடைந்த நோயாளிகள் மிகக்கடுமையான நெருக்கடிகளை எதிர்நோக்குவதாகவும் இங்குள்ள நிலைமை ஒரு பெரிய மனித அவலத்தை ஒத்ததாக இருக்கிறது எனவும் முல்லைத்தீவு மாவட்ட சுகாதார அதிகாரி டாக்டர் வரதராஜன் தெரிவித்துள்ளார்.

பி.பி.சி தமிழோசைக்கு அவர் வழங்கிய நேர்காணலின்போது மேற்கண்ட கருத்தினைத் தெரிவித்தார்.


வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத ஒரு மனித அவலம் அங்கு நடந்து கொண்டிருக்கின்றது.

இன்று கூட (நேற்று) புதுமாத்தளன் பகுதியில் கடுமையான ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பெரும் எண்ணிக்கையிலான காயப்பட்டவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

85க்கும் மேற்பட்ட காயமடைந்தவர்கள் கொண்டு (14ஆம் பக்கம் பார்க்க)





புதிய மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகள் மீது நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலில் படுகாயமடைந்தவர்கள் தற்காலிக இடமொன்றில் தங்கவைக்கப்பட்டிருப்பதையும் காயமடைந்த ஒருவரை உறவினர்கள் தூக்கிச் செல்வதையும் மேலுள்ள படங்களிலும் இத்தாக்குதலில் உயிரிழந்தவர்களின் சடலங்களையும் தாக்குதலில் இருந்து பாதுகாப்புத் தேடும் சிறுவர்களையும் கீழுள்ள படங்களில் காணலாம் (படங்கள் -புதினம்)

# வன்னியிலிருந்து சென்றவர்களின் வாகனத்தின் மீது துப்பாக்கிச் சூடு

## ஒருவர் பலி; 12 பேர் படுகாயம்

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்தவர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் கைக்குண்டுத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் 12 பேர் காயமடைந்திருப்பதாக வவுனியாப் பொலி ஸார் தெரிவிக்கின்றனர்.

இடம்பெயர்ந்த மக்களை ஏற்றிக் கொண்டு வந்த பேருந்து மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மாங்குளத்திற்கும் புளியங்குளத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் நள்ளிரவு பயணித்துக்கொண்டிருந்த போதே இந்தத் தாக்குதல் நடந்திருப்பதாகவும் பொலிஸ் வட்டாரத் தகவல்கள் கூறுகின்றன.

விடுதலைப் புலிகளே இந்தத் தாக்குதலை நடத்தியிருப்பதாக வவுனியாப் பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அதேநேரம் காயமடைந்தவர்கள் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை வன்னியில் தொடர்ந்து வரும் மோதல்களால் இடம்பெயர்ந்து வவுனியாவுக்கு வரும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கடந்த 12 ஆம் திகதி மாலை வரை வன்னியிலிருந்து வவுனியாவுக்கு 28 ஆயிரத்து 196 பேர் வந்திருப்பதாக வவுனியா அரசாங்க செயலக வட்டாரத் தகவல்கள் கூறுகின்றன.

இவ்வாறு வந்த பொதுமக்கள் 12 இடங்களில் தங்கவைக்கப்பட்டிருப்பதாகவும், ஆயிரத்து 351 பேர் செட்டிகுளத்தில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் கதிர்காமர் கிராம வீட்டுத்திட்டத்தில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

மனிப்பாம் பாடசாலையில் 188 குடும்பங்களைச் சேர்ந்த 582 பேரும் செட்டிகுளம் மகாவித்தியாலயத்தில் 512 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 623 பேரும் பூந்தோட்டம் கல்வியியல் கல்லூரியில் 4 ஆயிரத்து 406 பேரும் பம்பைமடு பல்கலைக் கழகத்தில் 2 ஆயிரத்து 800 பேரும் தங்கவைக்கப்பட்டுள்ளனர். நெளுக்குளம் தொழில் நுட்பக் கல்லூரியில் 2 ஆயிரத்து 375 பேரும் நெளுக்குளம் கலைமகள் பாடசாலையில் 2 ஆயிரத்து 844 பேரும் பட்டாணிச்சூர் மகாவித்தியாலயத்தில் ஆயிரத்து 333 பேரும் கோயில்குளம் இந்துக் கல்லூரியில் ஆயிரத்து 66 பேரும் காமினி மகாவித்தியாலயத்தில் ஆயிரத்து 547 பேரும் பூந்தோட்டம் மகாவித்தியாலயத்தில் ஆயிரத்து 889 பேரும் வவுனியா மத்திய மகாவித்தியாலயத்தில் 6 ஆயிரத்து 380 பேரும் தங்கவைக்கப்பட்டிருப்பதாக அரசாங்க செயலக வட்டாரங்கள் கூறுகின்றன. (ச-5)


## மணமகள் தேவை

வேளாள குலம், உதயத்து செவ்வாய், 1979 இல் பிறந்த, கொழும்பில் வியாபாரம் செய்யும் மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை.

தொடர்புக்கு:
பா.பரமேஸ்வரி,
அம்மன் கோவிலடி,
திருநெல்வேலி.

(C-2130)


# பருத்தித்துறைக்கு படகில் வந்த 7 பேர் கடற்படையினரால் கைது

பருத்தித்துறைக்கு படகில் வந்த 7 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். முல்லைத்தீவிலிருந்து கள்ளப்பாடு பிரதேசத்திற்குச் இடம்பெயர்ந்து சென்றவர்களில் 7பேர், அங்கு மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல்களையடுத்து தமது படகின் மூலம் பருத்தித்துறை நோக்கி வந்தபோது கடற் படையினர் அவர்களைக் கைது செய்துள்ளனர்.

படகின்மூலம் வந்த ஏழுபேரையும் பருத்தித்துறை பொலிஸார் பருத்தித்தித்துறை மாவட்ட நீதிமன்றில் நீதவான் கே. அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்தனர். விசாரணைகளை மேற்கொண்ட நீதவான் யாழ். அரச அதிபரின் அனுசரணையோடு அம்மக்களை நலன்புரி நிலையத்தில் தங்க வைக்க உத்தரவிட்டார். இவ்வாறு படகின் மூலம் பருத்தித்துறை வந்தவர்களின் பெயர்கள் வருமாறு; அ.பெனடிக், அ.டயானா, அ.ரமேஸ், மோ.ரஞ்சன், பெ.லெனின், வி.விஜிதா, ர.ஆதித்தன். (ச-14,52)

# கசிப்பு விற்பனை செய்த பெண்ணுக்கு அபராதம்

கசிப்பு விற்பனை செய்த பெண்மணி ஒருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளது. அபராதப் பணத்தைச் செலுத்தத்தவறின் மூன்றரை வருடக் கடூழியச்சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும் எனவும் தீர்ப்பளித்துள்ளது. அல்வாயைச் சேர்ந்த பெண்ணொருவர் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டபோது இவரை பருத்தித்துறைப் பொலிஸார் கைதுசெய்து பருத்தித்துறை நீதிமன்றில் நீதிபதி கே. அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் படுத்தினர் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையில் கசிப்பு வைத்திருந்த குற்றத்திற்காக ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததோடு அபராத பணத்தை செலுத்தத்தவறின் 2 வருட கடூழியச் சிறைத்தண்டனையும் கசிப்பு உபகரணங்களை வைத்திருந்த குற்றத்திற்காக ஒரு இலட்சம் ரூபா அபராதமும் அபராதத்தை செலுத்தத்தவறின் ஒன்றரை வருட கடூழிச்சிறைத்தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்ததோடு சான்றுப்பொருட்களை அழிக்குமாறும் உத்தரவிட்டார். (ச-14,52)

# இலங்கையில் போரை நிறுத்தக் கோரி தமிழக தலைவர்கள் இந்.பிரதமருக்கு கடிதம்

இலங்கை பிரச்சினையை நிறுத்தக்கோரி அதிமுக உட்பட ஒன்பது கட்சிகளின் தலைவர்கள் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளனர்.

இலங்கையில் போரை நிறுத்த மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, பாரதீய ஜனதா தலைவர் எல்.கே.அத்வானி, வெளிவிவகாரத் துறை முன்னாள் அமைச்சர் யஷ்வந்த் சின்கா, வ.கம்யூனிஸ்ட் தலைவர்கள் ஏ.பி.பரதன், டி.ராஜா, அதிமுக நாடாளுமன்ற குழு தலைவர் ராம்தாஸ், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் தலைவர் பிஸ்வாஸ், தெலுங்குதேசம் கட்சியின் தலைவர் எர்ரன்நாயுடு, இந்திய தேசிய லோக்தள் தலைவர் அசோக்ராஜா, தேசிய லீக் கட்சியின் தலைவர் பஷீர் அகமது உட்பட 9 கட்சிகளின் தலைவர்கள் கையெழுத்திட்ட கோரிக்கை மனுவை பிரதமர் மன்மோகன் சிங்குக்கு அனுப்பி வைத்தனர்.

பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இலங்கையில் வடக்குப் பகுதியில் இலங்கை இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே தொடர்ந்து சண்டை நடைபெற்று வருகிறது. இதில் ஏராளமான அப்பாவி மக்களும் பலியாகி வருகிறார்கள்.

இதையறித்து அரசியல் கட்சி தலைவர்கள் மற்றும் எம்.பிக்களான நாங்கள் மிகவும் கவலை அடைந்துள்ளோம். சண்டை நடைபெற்று வரும் முல்லைத்தீவு பகுதியில் சுமார் 5 லட்சம் தமிழர்கள் சிக்கி உள்ளனர். அவர்களுக்கு உணவு, மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் எதுவும் கிடைக்கவில்லை. அப்பகுதியில் இலங்கை இராணுவம் தொடர்ந்து குண்டு வீச்சிக் கொண்டிருக்கிறது. வான் வழித் தாக்குதலை அதிகப்படுத்திக் கொண்டே இருக்கிறது.

தமிழர்களை ஒட்டுமொத்தமாக அழிக்க இலங்கை இராணுவம் முயற்சிக்கிறது. சண்டையில் அப்பாவி ஆண்கள், பெண்கள், குழந்தைகள் கொல்லப்பட்டு உள்ளனர்.

எனவே இந்திய அரசு இப்பிரச்சினையில் தலையிட்டு ராஜதந்திர நடவடிக்கையை மேற்கொண்டு இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட வழிவகுக்க வேண்டும். தமிழர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம் என்று அம்மனுவில் கூறப்பட்டுள்ளது (ச-5)

## நிர்வாக சபைக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவையின் நிர்வாகசபைக் கூட்டம் இல. 95, கே. கே. எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள 'சாந்தி மாலா' என்னும் இல்லத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு சகல நிர்வாகசபை உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு செயலாளர் லயன். வ. பரமசிவம் கேட்டுக் கொள்கிறார். (ஓ)

## குடாநாட்டில் தாராள மணல் விநியோகத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் கட்டிடப் பொருட்களுக்கு நிலவும் தட்டுப்பாடுகள் மற்றும் தடைகளை நீக்கும் வகையில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வடமாகாணத்திற்கான விடேச செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தற்போது நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

இந்தவகையில் யாழ். குடாநாட்டில் சீமெந்துக்கு நிலவி வந்த தட்டுப்பாடுகள் தற்போது படிப்படியாக நீக்கப்பட்டு வரும் நிலையில் குடாநாட்டில் மணல் தாராளமாகக் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் மேற்கொண்டு வருகின்றார்.

இதன் பிரகாரம், மணலின் விலையைக் குறைப்பதற்கும், குடாநாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் மணலைத் தாராளமாக கிடைக்கச் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்துள்ள அமைச்சர் இவ் விடயம் தொடர்பில் பாதுகாப்பு செயலாளர் மற்றும் யாழ் பாதுகாப்பு உயரதிகாரிகளுக்கு தெரிவுபடுத்தி, பாதுகாப்புத் தரப்பிலான தடைகளைத் தளர்த்தவிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிலையில், இன்னும் சில தினங்களில் குடாநாட்டில் மணல் விநியோகம் தொடர்பிலான பிரச்சினைகள் தீர்க்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 140 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 180 |
| தக்காளி | 140 | 130 |
| அவரை | 60 | -- |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 80 |
| கோவா | 40 | 60 |
| கரட் | 50 | 60 |
| பூசணி | 30 | 50 |
| புடோல் | 40 | 50 |
| வாழைக்காய் | 120 | 140 |
| சின்ன வெங்காயம் | 40 | 40 |
| பெரிய வெங்காயம் | 60 | 80-100 |
| பாகற்காய் | 80 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 60 |
| கரணைக் கிழங்கு | 30 | -- |
| பயிற்றங்காய் | 100 | 80 |
| லீக்ஸ் | 200 | 140 |
| போஞ்சி | 25 | 40-50 |
| கீரை - 1 பிடி | 10 | 15 |
| தேசிக்காய் | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 35 |

## முன்பள்ளிகள் மாணவர்களை நற்பிரஜைகளாக உருவாக்கும் திறனை கொண்டிருக்க வேண்டும்

### நல்லூர் பிரதேச செயலர் தெரிவிப்பு

மாறிவரும் நவீன கல்விச் சீர்திருத்தப்படி ஒரு மாணவன் ஆரம்பக் கல்வியில் அடைய வேண்டிய பண்புத்தரம், தேர்ச்சிகளை விருத்தி செய்து நற்பிரஜைகளை உருவாக்கும் திறன்களை முன்பள்ளிகள் கொண்டிருக்க வேண்டும் என்று நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனன் தெரிவித்துள்ளார்.

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா புதிய முன்பள்ளியை அண்மையில் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், பாலர் பள்ளிகள் அழகான, அமைதியான, சூழலில் அமைக்கப்பட வேண்டும். அப்போது தான் மகிழச்சிகரமான, உறுதியான, உயிர்த்துடிப்புள்ள விளையாட்டு, கணித, சூழல் அறிவுகளை ஒத்திசைவான, அசைவு செயற்பாடுகள் மூலம் முன்னெடுக்க முடியும். புதிய இம் முன்பள்ளியில் இணைப்பாட விதான உபகரணங்கள் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டு சிறப்பாக இக் கட்டித்தை பயன்படுத்துவதற்கு வேண்டிய உதவிகளை பிரதேச செயலகம் மெற்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-36)

## இல்ல மெய்வன்மைப் போட்டி

கைதடி நபீல்ட் செவிப்புலன், விழிப்புலன் இழந்தோர் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்திராக தென்மராட்சி பிரதேச செயலர் எஸ். ஸ்ரீநிவாசன் கலந்துகொள்ளவுள்ளார். (ஓ-21)

## ஞாபகார்த்த நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்/ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் ஒறேற்றர் சி. சுப்பிரமணியத்தின் 15 ஆவது ஆண்டு ஞாபகார்த்த நினைவுப் பேருரை எதிர்வரும் 18 ஆம் திகதி பிற்பகல் 1 மணிக்கு கல்லூரி மண்படத்தில் அதிபர் ஆறுதிருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நினைவுப் பேருரையில் "நவீன விஞ்ஞானக் கற்கைகளில் காலத்தின் தேவை" என்னும் விடயத்தில் யாழ். பல்கலைக்கழக பௌதீகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இளம் விஞ்ஞானி கலாநிதி புண்ணியமூர்த்தி ரவிராஜன் நினைவுப் பேருரையை நிகழ்த்துவார். (ஓ)

## பரிசளிப்பும் கலை விழாவும்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் ஞான வைரவ சுவாமி கோவில் கல்வி அபிவிருத்தி நிதியத்தின் சர்வதேச ஆங்கில கவின்கலை மாணவர்களின் கலைநிகழ்வும் பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய ஆங்கில உதவிக் கல்விப்பணிப்பாளர் ரி. தியாகராசா, கௌரவ விருந்தினராக திருமதி. இந்திரமதி இராமச்சந்திரா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ)

## பொதுக்கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் என்பவற்றின் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகிகள் தெரிவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நிலைய பொன்விழா மண்டபத்தில் நிலைய தலைவர் கோ. நரேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ஓ-36)

## தேசிய இலக்கியப் போட்டி

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 2009 ஆம் ஆண்டுக்கான தேசிய இலக்கியப் போட்டிகள் பிரதேச, மாவட்ட, மாகாண, தேசியமட்டங்களில் மட்டுப்படுத்தப்பட்ட, திறந்த எனும் இரு பிரிவுகளாக நடாத்தப்படவுள்ளன. பிரதேச மட்டத்திலான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிகளில் வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மாணவர்களும், திறந்த போட்டிகளில் இப்பிரதேச பொதுமக்களும் கலந்து கொள்ளலாம்.

இதற்கான விண்ணப்பபடிவங்களைப் பாடசாலைகளிலும் அந்தந்தக் கிராம சேவையாளர்களிடமும் பெற்றுத் தமது ஆக்கங்களை மார்ச் மாதம் 23 ஆம் திகதிக்கு முன்பாக கலாசாரப்பிரிவு, பிரதேச செயலகம், வலிகா மம் மேற்கு, சங்கானை என்ற முகரிக்கு அனுப்பிவைக்குமாறும் மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் கலாசாரப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறும் வலி மேற்கு சங்கானை பிரதேச செயலர் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)

## வாரம் ஒரு தகவல்

## பேயைப் பார்க்கலாம்!

"டாக்டர், என் வீட்டுக்காரர் பேயைக் கண்ணால் பார்த்தேன் என்று சொல்கிறார்... நம்பலாமா?"

"நம்பலாம்"

"என்ன சொல்றீங்க டாக்டர்?"

"பார்வைக் கோளாறால் பாதிக்கப்பட்டவர்களுக்கு குறிப்பாக கட்ராக்ட் என்ற கண்நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பேய் தெரியும்."

"அப்படியா?"

"ஆமாம். சில முதியவர்களுக்கு தொலைக்காட்சிப் படங்களும், முழு வண்ணக் கலண்டர் படங்களும் உயிருள்ள மனிதர்களைப் போலவே தோன்றும். தூரத்தில் நிழல் உருவங்கள் நடந்து போவதை இவர்கள் பார்ப்பார்கள்."

"இதற்கு என்ன காரணம்?"

"இதைப்பற்றி மனநல மருத்துவர்கள் ஆராய்ச்சி பண்ணிப் பார்த்தார்கள். கற்பனை உருவங்களைப் பார்ப்பவர்கள் பலருக்கு கட்ராக்ட் நோய் இருப்பது தெரியவந்தது. இவ்வகை நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் போது பார்க்கும் பொருளைப் பற்றிக் குறைவான உணர்வுத் தகவல்களே மூளைக்கு அனுப்பப் படுகிறது.

இந்தக் குறையைச் சரிசெய்ய மூளை சில தனிப்பட்ட அணுகு முறைகளை உருவாக்கிக் கொள்கிறது. மூளைக்கு அனுப்பப் படும் குறைந்தளவு உணர்வுத் தகவல்கள் இதனால் மிகைப் படுத்தப்படுகிறது. சிலசமயம் முற்றிலும் புதிய உருவம் கூட உணரப்படும்."

"அப்படியானால் என் வீட்டுக்காரருக்கு பார்வைக் கோளாறு என்றா சொல்கிறீர்கள்"

"அப்படித்தான் இருக்க வேண்டும். எதற்கும் நேரில் அழைத்துக் கொண்டு வாருங்கள். பரிசோதனை பண்ணிப் பார்த்து விடுவோம்."

"என்ன டாக்டர் இப்படிச் சொல்றீங்க?"

"ஏன்?"

"இதோ ... என் வீட்டுக்காரர் என் பக்கத்தில் தான் உட்கார்ந்திருக்கிறார்."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இராசி பலன்

15.02.2009
(மாசி 3, ஞாயிற்றுக்கிழமை)
சஷ்டி பிற்பகல் 5.03 வரை
சுவாதி பின்னிரவு 2.44 வரை
இராகுகாலம் 5.03- 6.33 வரை
சுபநேரம் 9.33-11.03 வரை
பருத்தித்துறை சித்தி விநாயகர் கொடியேற்றம்

| | |
|---|---|
| மேடம் | காரிய அனுகூலம், அபூர்வ சந்திப்பு, குடும்ப மகிழ்ச்சி, நல்ல வரவேற்பு. |
| இடபம் | சுவாரஸ்யம், முயற்சி கைகூடும், பகைவர் நேசம், பொருள் சேர்க்கை. |
| மிதுனம் | தொழில் சிந்தை, சிறுவியாதி, தாழ்ந்த சுபாவம், தனவிரயம். |
| கடகம் | ரோகபயம், அதிக பிரயாசை, சுப செலவு, முயற்சி தாமதம். |
| சிங்கம் | கூட்டு முயற்சி, இனிய அனுபவம், வாக்கு மேன்மை, பணவருவாய். |
| கன்னி | கடின வார்த்தை, பொருள் விரயம், முயற்சி தாமதம், திடீர் நன்மை. |
| துலாம் | தெய்வசிந்தை, நண்பர்கள் உதவி, சயன சுகம், போசன நன்மை. |
| விருச்சிகம் | சயன சுகக் குறைவு, காரிய தாமதம், சுபசெலவு, பிரயாணம். |
| தனுசு | தொழில் நன்மை, மனமகிழ்ச்சி, பொருள் சேர்க்கை, காரிய அனுகூலம். |
| மகரம் | தூர தேசச் செய்தி, உற்சாகமான நிலை, காரிய நன்மை, போசன சுகம். |
| கும்பம் | புதிய திட்டமிடல், அச்சமான நிலை, பிரயாணம், முயற்சி தாமதம். |
| மீனம் | எதிரிகள் தொல்லை, காரிய தடங்கல், மனச்சோர்வு, போசன சுகம். |

வளவன்

## வீதியில் முடிந்திடும் விதி

வீதி ஒழுங்கு விதியைக் கொஞ்சம் கவனி
மீறின் மாறும் தலைவிதி எனவே கவனி
நாளும் நாளும் அதிகரிக்கும் வீதி விபத்து
நாளிதழ்கள் அதை அச்சுறுத்துது நமக்கு

அரை நிமிட அவசரம் ஏன் உனக்கு
அதனால் நடக்கும் உயிரிழப்பு எதற்கு
ஆர்முடுக்கியை அழுத்தமுன் சற்று சிந்தி
அதனால் தவிர் உயிரிழப்பு குருதி சிந்தி

விதியின் பயனாய் ஏற்படுவதே இறப்பு
வீதி ஒழுங்கை மீறின் அது உன் தப்பு
கதியைக் கூட்டிக் காட்டும் சாகசம் ஏன்?
பாதி வழியே அது பறிக்கும் உயிர் வீண்

சட்டமே! நீதான் விழித்தெழு இங்கே
சாட்டையைக் காட்டு திருந்திட வென்றே
வீதி விதிமுறை உரைத்திடு நன்றே
விதியையும் வென்றிட புறப்படு இன்றே

ஜெ. உமாசுதன், வடலியடைப்பு.

# இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி சட்டத்தரணிகள் ரயில் மறியல் போராட்டம்



(சென்னை)

இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய வலியுறுத்தி, சென்னை உயர்நீதிமன்ற சட்டத்தரணிகள் சிலர் திடீரென ரயில் மறியலில் ஈடுபட்டதால், நேற்றுமுன்தினம் சென்னை சென்ட்ரலிலிருந்து, பெங்களூர் எக்ஸ்பிரஸ் 10 நிமிடம் தாமதமாக புறப்பட்டுச்சென்றது. உயர்நீதின்ற சட்டத்தரணிகள் சங்கத் தலை வர் பால்கனகராஜ் தலைமை யில் உயர்நீதிமன்ற வளாகத் தில் சட்டத்தரணிகள் ஒன்று சேர்ந்தனர்.

சென்ட்ரல் ரயில் நிலையத்தில் ஆர்ப்பாட்டம் செய்வதற்காக தனியார் பஸ்சில் ஏறிச் சென்றனர்.செயலர் வேல் முருகன்,நிர்வாகி பாபுமுருகவேல்,முன்னாள் நிர்வாகி அப்துல் ரகுமான், பா.ம.க.சட்டத்தரணி பாலு உள்ளிட்ட பலர் சென்றனர்.மெமோரியல் ஹோரல் அருகில், சட்டத்தரணிகளை பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.பால்கனராஜ் உட்பட 42 பேர் கைது செய்யப்பட்டனர். அப்போது, பொலிஸாருக்கு தெரியாமல் 16 பேர் சென்ட்ரல் ரயில் நிலையம் சென்றனர். நிலை யம் முன்பாக பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.இதனால், பயணிகள் போல் பொலிஸாரை ஏமாற்றிவிட்டு மூன்றாவது பிளாட்பாரத்திற்கு ஓடிச் சென்று மதியம் 1.20 மணிக்கு புறப்பட இருந்த பெங்களூர் எக்ஸ்பிரஸ் முன் திடீர் மறியலில் ஈடுபட்டனர்.

பொலிஸாருக்கு உடனடியாக தெரியவர அங்கு ஓடிவந்து அவர்கள் அனைவரையும் அப்புறப்படுத்தினர். இதனால், பெங்களூர் எக்ஸ்பிரஸ் 10 நிமிடம் தாமதமாக புறப்பட்டுச் சென்றது.மறியலில் ஈடுபட்ட மூன்று பெண் சட்டத் தரணிகள் உட்பட 16 பேர் அங்கு கைது செய் யப்பட்டனர். மெமோறியல் ஹோல் மற்றும் சென்ட்ரலில் கைதுசெய்யப்பட்ட சட்டத்தரணிகள் அனைவரும் பொலிஸ் வானில் கொண்டித்தோப்பில் உள்ள திருமண மண்டபத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டனர். பின், அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். (ஓ-6)

# இலங்கை தமிழர் பிரச்சினை மயிலாப்பூரில் இன்று காங்கிரஸ் பொதுக்கூட்டம்

(சென்னை)

இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் மத்திய அரசின் நிலைப்பாடு குறித்து விளக்க காங்கிரஸ் பொதுக் கூட்டம் இன்று மாலை மயிலாப்பூர் மாங்கொல்லையில் நடைபெறவுள்ளது.

கூட்டத்திற்கு தமிழக காங்கிரஸ் தலைவர் கே.வி.தங்கபாலு தலைமை தாங்குகிறார். மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் சிறப்புரையாற்றுகிறார்.இலங்கை தமிழர்கள் பிரச்சினையில் மத்திய அரசின் நிலைப்பாடு என்ன என்பது குறித்து அவர் விளக்கம் அளிக்கிறார்.

கூட்டத்தில் முன்னாள் , எம்.பிக்கள்,மூத்த தலைவர்கள், முன்னணி தலைவர்கள் மற்றும் அகில இந்திய காங்கிரஸ் குழு உறுப்பினர் கார்த்தி சிதம்பரம் உட்பட பலர் கலந்துகொள்கிறார்கள். (ஓ-6)




# கப்பலில் வந்த மாலுமிகளின் உயிரை பறித்தது விஷ மீன் முட்டைகள்

கன்னியாகுமரியில் சங்கிலித்துறை அருகே திருவள்ளுவர் சிலைக்கு பின்புறம் கடந்த 12 ஆம்திகதி ஒருமர்மக் கப்பல் நின்றது. அது எங்கிருந்து வந்தது, எதற்காக நிற்கிறது என்று விசாரித்த போது அது கொரிய சரக்கு கப்பல் என்றும், குஜராத் மாநிலம் கண்டல துறைமுகத்தில் இருந்து கால்நடை தீவனங் களை ஏற்றிக்கொண்டு கொச்சி வழியாக கொரியாவுக்குச் சென்ற கப்பல் என்பதும் தெரியவந்தது. கடலோரக் காவல்படை அதிகாரிகள் இது பற்றி விசாரித்து வந்தபோது கப்பலில் இருந்த உழியர்கள் உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பதாகவும், அவர்களை உடனே சென்று காப்பாற்றும்படியும், கடலோரக்காவல் படையினருக்கு உயர் அதிகாரிகள் உத்தரவிட்டனர்.


கடலோரக் காவல் படையினர் குமரிமாவட்ட பொலிஸாரின் உதவியுடன் மாவட்ட சுகாதாரத் துறை அதிகாரிகளை அழைத்துக்கொண்டு நேற்றுமுன்தினம் கப்பலுக்குச் சென்றனர். அங்கு கப்பல் மாலுமிகள் உட்பட 18 பேர் மயங்கி கிடந்ததைக் கண்டனர். அவர்களுக்கு கப்பிலிலேயே முதலுதவி சிகிச்சை அளித்தனர். அப்போதுதான் மயங்கிக் கிடந்தவர்களில் 4பேர் இறந்துகிடப்பது தெரியவந்தது. உடனே இறந்து கிடந்த 4மாலுமிகளையும் கப்பலில் உள்ள குளிர்சாதனப் பெட்டியில் வைத்துவிட்டு மயங்கிக் கிடந்த 14 பேரையும் மீட்புப் படகில் ஏற்றிக் கரைக்குக் கொண்டு வந்தனர்.

பின்னர் அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. சிகிச்சை பெற்ற கப்பல் ஊழியர்கள் 14பேருக்கு நேற்று காலையில் உணர்வு திரும்பியது. கப்பல் ஊழியர்களுக்கு உணர்வு திரும்பிய தகவலை டாக்டர்கள் அதிகாரிகளுக்கு தெரிவித்தனர். இதற்கிடையே கப்பலில் அவர்கள் மயங்கி கிடந்ததன் காரணம் என்ன? என்பதும் தெரியவந்துள்ளது. குஜராத்தில் இருந்து கப்பலில் புறப்பட்டபோது 'பேச்சா' என்ற மீனையும் அதன் முட்டைகளையும், கப்பல் ஊழியர்கள் வாங்கிவந்து குளிர்சாதன பெட்டியில் வைத்துள்ளனர். கப்பல் புறப்பட்ட பின்பு அவர்கள் அந்த மீனை சமைத்து சாப்பிட்டுள்ளனர்.பேச்சா வகைமீன் உண்பதற்கு சுவையாக இருக்கும். ஆனால் அந்த மீனும் அதன் முட்டையும் விஷத்தன்மை கொண்டதாகும். இதை அறியாமல் ஊழியர்கள் மற்றும் மாலுமிகள் மீனைச் சாப்பிட்டதால் அவர்களுக்கு வாந்தி, பேதி ஏற்பட்டு கப்பலிலேயே மயங்கி விழுந்துள்ளனர்.மீன் முட்டகளை அதிகமாக தின்ற 4 பேர் பலியாகியுள்ளனர். மற்றவர்கள் உயிருக்கு ஆபத்தான நிலையில் போராடிக் கொண்டிருந்த போது தான் மீட்கப்பட்டுள்ளனர். (ஓ-6)

# ஹவுராவிலிருந்து சென்னையை நோக்கி வந்த ரயில் தடம் புரண்டதில் 16 பேர் பலி

(புவனேஸ்வரி)

ஹவுராவிலிருந்து சென்னையை நோக்கி வந்து கொண்டிருந்த, கோரமண் டல எக்ஸ்பிரஸ் ரயில் தடம் புரண்டு விபத்துக்குள்ளா னதில் 16 பேர் பலியானார்கள். 160க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். ஒரிசா மாநிலம், ஜாஜ்பூர் ரோட் ரயில் நிலையம் அருகே வந்தபோது, ரயிலின் 14 பெட்டிகள் தடம் புரண்டதில், 15பேர் இறந்தனர். 60க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.



இவர்களில் சிலர் தமிழகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என நம்பப்படுகிறது. ரயிலின் 18 பெட்டிகள் தடம் புண்டதாக ரயில்வே கட்டுப்பாட்டு அறை அதிகாரிகளும், 14பெட்டிகள் தடம் புரண்டதாக கிழக்குக் கடற்கரை ரயில்வே அதிகாரிகளும் கூறியுள்ளனர். ரயில் தடம்புரண்ட இடம் கும்மிருட்டாக இருந்ததால், மீட்புப் பணிகளை விரைவாக மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டது.அப் பகுதி மக்களும் மீட்புக் குழுவினருடன் இணைந்து துரிதமாக செயல்பட்டனர்.ரயில் விபத்து குறித்து உயர் மட்ட குழு விசாரணைக்கு உத்தர விடப்படும்என ரயில்வே அதிகாரிகள் கூறியுள்ளனர். (ஓ-6)

# இலங்கை அதிபரின் நிலைப்பாட்டை மத்திய அரசு வழிமொழிந்திருக்கிறது

## குடியரசுத் தலைவர் உரை குறித்து பழ.நெடுமாறன்

(சென்னை)


இலங்கைப் பிரச்சினையில், அதிபர் ராஜபக்ஷவின் நிலைப்பாட்டை மத்திய அரசு வழிமொழிந்து இருக்கிறது என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் குற்றம்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து வெள்ளிக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில்,

இலங்கையில் போர்நிறுத்தம் குறித்த மத்திய அரசின் நிலைப்பாடு என்ன என்பது பற்றி குடியரசுத் தலைவரின் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைப்பாடு முழுமையதானதாக இல்லை.ஏற்கனவே, இலங்கை அதிபர் ராஜபக்ஷ எடுத்துள்ள நிலைப்பாட்டினையே இந்தியக் குடியரசுத் தலைவரும் வழிமொழிந்திருக் கிறார்.

இலங்கைத் தமிழர்களின் பாதுகாவலர்களாக விடுதலைப்புலிகள் மட்டுமே இருக்கிறார்கள். அவர்களும் ஆயுதங்களை கீழே வைத்துவிட்டால் அந்த மக்களுக்குப் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டு விடும். தமிழினப் படுகொலையை நடத்த இலங்கை இராணுவத்திற்கு வசதியாகி விடும்.

பாலஸ்தீனத்தில் காஸா பகுதியில் இஸ்ரேலிய இராணுவம் திடீரெனப் புகுந்து அப்பாவி மக்களை படுகொலை செய்தது. இதனை, இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் கண்டித்தன. உடனடியாக, இஸ்ரேலியப் படை காஸா பகுதியில் இருந்து வெளியேற வேண்டு மெனவம், அங்கு இரு தரப்பும் போர் நிறுத் தம் செய்யுவேண்டும் எனவும் இந்தியாவும்,



உலக நாடுகளும் வற் புறுத்தின.

ஆனால், போர் நிறுத்தத்துக்கு நிபந்தனையாக பாலஸ்தீன ஹமாஸ் இயக்கம் ஆயுதங்களை கீழே போட வேண்டுமென இந்தியாவோ, பிற நாடுகளோ கூறவில்லை.

எரிவதை இழுத்தால் கொதிப்பது நிற்கும் என்ற பழமொழிக்கு இணங்க இலங்கை அரசுக்கு இந்தியா அளித்துவரும் இராணுவ ரீதியான உதவிகளை நிறுத்தினால் ஒழிய உண்மையான போர் நிறுத்தத்துக்கு இலங்கை அரசு ஒருபோதும் சம்மதிக்காது. இலங்கை இராணுவத்தால் மருத்துவமனைகள் தாக்கப்பட்டு, மருத்துவர்களும், தாதிகளும் வெளியேற்றப்பட்டு விட்டனர்.எனவே, உடனடியாக மருத்துவர்கள் குழு ஒன்றை அனுப்பி உதவவேண்டும் என்று பழநெடுமாறன் கோரிக்கை விடுத்துள்ளார். (ஓ-6)

# சென்னையில் உளவுப்படை ஊடுருவல்;

## டாக்டர் இராமதாஸ் அதிர்ச்சி தகவல்

சென்னையில் பாகிஸ்தான் மற்றும் இலங்கை உளவுப் படையினர் ஊடுருவியிருப்பதாகவும், இதனால் தமிழகத்துக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாகவும் பாமக நிறுவுனர் டாக்டர் இராமதாஸ் எச்சரித்திருக்கிறார். இலங்கையில் உடனே போர்நிறுத்தம் செய்ய கட்டளையிடுமாறு சோனியாகாந்தியிடம் தமிழகத்தைச் சேர்ந்த காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள்,மத்திய அமைச்சர்கள் வலியுறுத்தவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

பாமக நிறுவுனர் டாக்டர் இராமதாஸ் நேற்று தைலாபுரத்தில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியதாவது, இலங்கையில் இருந்து ஒற்றர்களும், கைக்கூலிகளும் தமிழகத்துக்கு, சென்னை நகருக்கு வந்திருப்பதாக சொல்லப்படுகிறது. ஏற்கனவே இதுபற்றி நான் தகவல்களை தெரிவித்து தமிழக காவல் துறை விழிப்புடன் கண்காணித்து செயல்பட வேண்டும் என்று உஷார்படுத்தியிருக்கிறேன்.

ஜி.கே.மணியும் இதுகுறித்து சட்டசபையில் அரசின் கவனத்தை ஈர்த்திருக்கிறார். ஆனால் தமிழக அரசும் காவல்துறையும் இதில் இன்னமும் கவனம் செலுத்தவில்லை என்று கூறப்படுகிறது. இலங்கையில் இருந்து வந்துள்ள இவர்கள், இலங்கை அரசின் ஆதரவோடு ராஜ மரியாதையுடன் இங்கே அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக சொல்லப்படுகிறது. சென்னையில் எழும்பூர் ரயில் நிலையத்திற்கு எதிரே உள்ள இலங்கை புத்தமத கோயில் இத்தகைய ஒற்றர்களுக்கு தஞ்சமளிக்கும் களமாக செயல்படுவதாக சொல்லப்படுகிறது.

இலங்கை ஒற்றர்கள் மட்டுமன்றி பாகிஸ்தான் ஒற்றர் படையான ஐஎஸ்ஐ ஏஜென்ட்களும் அங்கு தனி அலுவலகம் வைத்து செயல்படுவதாகவும் சொல்லப்படுகிறது.

இத்தகைய ஊடுருவல்களால் தமிழகத்தில் இலங்கை தமிழர் நலனுக்காக குரல் கொடுத்துவரும் தலைவர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு கூடுதல் பாதுகாப்பை அளிக்க வேண்டும். நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இலங்கை தமிழர் பிரச்சினை கட்சி பாகுபாடின்றி விவாதிக்கப்பட்டிருக்கிறது. போர் நிறுத்தப்பட வேண்டும் என்று அனைத்துத்தரப்பு உறுப்பினர்களும் வலியுறுத்தியிருக்கிறார்கள். இந்த அளவுக்கு இலங்கை தமிழர் பிரச்சினை, நாட்டின் தேசிய பிரச்சினையாக அனைத்துக் கட்சியினரும் கவனம் செலுத்தும் முக்கிய பிரச்சினையாக மாறியிருப்பதற்கு பாமக எம்பிக்கள் மேற்கொண்ட முயற்சி முக்கிய காரணமாகும்.

தமிழக காங்கிரஸ் எம்.பிக்கள் நாடாளுமன்றத்தில் பேசுவதோடு நின்றுவிடாமல், காங்கிரஸ் எம்.பிக்கள், தலைவர்கள் ஆகியோருடன் காங்கிரஸ் தலைவர் சோனியா, மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோரை சந்தித்து இலங்கையில் போரை நிறுத்தும்படி வேண்டுகோள் அல்ல கட்டளையிட வேண்டும் என்று கேட்டுக் கொள்ள வேண்டும்.இதுதொடர்பாக தமிழக காங்கிரஸ் தலைவர் கே.வீ.தங்கபாலு, சட்டமன்ற காங்கிரஸ் தலைவர் டி.சுதர்சனம் ஆகியோருக்கு கடிதம் அனுப்ப இருக்கிறேன். முல்லைத்தீவு பகுதியில் சிக்கியுள்ள தமிழர்களுக்கு செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த ஊழியர்கள் மூலம் உதவி கிடைத்து வருகிறது. எனவே அவர்களை அங்கிருந்து திரும்ப அழைக்கக் கூடாது என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத் துக்கு தமிழ் நாட்டில் இருந்து தந்திகளை அனுப்பி வைக்க வேண்டும் இவ்வாறு இராமதாஸ் கூறினார். (ஓ-6)

# இலங்கையில் தமிழர் 71

### ஆதிவரலாற்றுக் காலம்

பொ.ஆ.மு.250 – பொ.ஆ.300

#### தமிழ் வணிகர்

ஆதி வரலாற்றுக் காலத்தில் தமிழ் ஆட்சியாளர் பற்றித் தகவல்கள் கிடைப்பதுபோல, பொருளியல் துறையில் பங்குகொண்டிருந்த தமிழ் வணிகர் பற்றியும் குறிப்பிடத்தக்க தகவல்கள் கிடைத்துள்ளன. முன்னர் கூறியதுபோல வர்த்தகம் பல்வகை வளர்ச்சிகளுக்கு முக்கிய காரணியாக இருந்து வந்துள்ளது. இப் பின்ன்ணியில் தமிழ்நாட்டு நிலப் பகுதிக்கும் இலங்கைத் தீவுக்கும் இடையில் நெருங்கிய வர்த்தகத் தொடர்புகள் இருந்திக்கும். இரு பிரதேசத்து வணிகர்களும் தடையின்றி, வர்த்தகம் நடத்தியிருப்பர். இக் காலத்தைச் சேர்ந்த சங்க நூலாகிய பட்டினப் பாலையில், 'ஈழத்துணவும் காளகத்து ஆக்கமும்' தமிழ் நாட்டுத் துறைகளுக்கு வருவது பற்றிக் கூறுவது இவ் வர்த்தகத் தொடர்புகளை உறுதிப்படுத்தும்.

இலங்கையில் இவ் வர்த்தகம் நடத்திய தமிழ் வணிகர் பற்றிய கல்வெட்டுச் சான்றுகளும், நாணயச் சான்றுகளும் மற்றும் பாளி வரலாற்று நூல்களில் வரும் இலக்கியச் சான்றுகளும் முக்கியமானவை. பிராமிக் கல்வெட்டுக்களில் 'தமிழ் வணிகன்' என்று பொருள்படும் பிராகிருதச் சொற்றொடராகிய 'தமெட வணிஜ' என்பது வவுனியா மாவட்டத்தில் உள்ள ஒரு பிராமிக் கல்வெட்டில் காணப்படுகிறது. அனுராதபுரத்தில் இயங்கிய ஒரு தமிழ் வணிகக் குழுவின் சில உறுப்பினர்கள் பெயர்கள் பிராமிக் கல்வெட்டொன்றில் காணப்படுகின்றன. அப் பெயர்களுள் ஒன்றுடன் 'நவிக' என்ற சொல் அடையாக உள்ளது. இது கப்பலோட்டி என்று பொருள்படும் இக் குழுவினர் கடல் வர்த்தகத்தில் ஈடுபட்டவர்கள் என்பதை இதிலிருந்து ஊகிக்கலாம். இலங்கையின் தென்கரையில் ரீதியாகம என்ற இடத்தில் பிராமி எழுத்துப் பொறித்த நாணயங்கள் சில கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் சில தமிழ்ப் பெயர்களைக் கொண்டுள்ளன. இத் தமிழ்ப் பெயர்களைக் கொண்டிருந்தோர் வர்த்தகத்தில் செல்வாக்குடன் விளங்கியிருக்க வேண்டும். அதனாலே தான் தங்கள் பெயர்களைக் கொண்ட நாணயங்களையே செய்து புழக்கத்தில் விட்டிருந்தனர் எனலாம்.

#### தொல்லியல் சான்று

ஆதி வரலாற்றுக் காலத்தில் இலங்கையில் இருந்த தமிழ்க் குடியிருப்புக்களை அடையாளங்காண உதவக்கூடிய சான்று தொல்லியல் சான்றாகும். தமிழர் வாழ்ந்த இடங்களில் அவர்கள் விட்டுச் சென்ற பொருட்களும் அவர்களுடைய சவ அடக்கங்களும் பெரிதும் பயன்படக்கூடிய சான்றுகளே. ஆனாலும் தொல்லியல் சான்றுகளை இலகுவில் இனக் குழுக்களுடன் தொடர்புபடுத்த முடியாது. எழுத்தில் இல்லாத ஏனைய சான்றுகள் ஒரு குறிப்பிட்ட இனக்குழுவின் பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டிருந்தாலும் அவை வேறு இனக் குழுக்கள் தழுவிய பண்பாட்டுக் கூறுகளாகவும் இருக்கலாம். இது ஆதி வரலாற்றுக் காலத்துக்கு பொருத்தமான கோட்பாடாகும். அக்காலத்தில், எடுத்துக்காட்டாக, தமிழ்நாட்டில் வழங்கிய பண்பாட்டின் கூறுகள் இலங்கையிலும் பரவியபோது தமிழர் அல்லாத பிற இனக்குழுவைச் சேர்ந்தோர் பலர் அவற்றைத் தழுவியிருப்பர். ஆகவே அவர்கள் விட்டுச் சென்றுள்ள எச்சங்கள் இப் பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்தும்போது, அவற்றுக்குப் பொறுப்பாக இருந்தோர் தமிழர் என்று ஐயத்துக்கு இடமின்றிக் கூறுவது கடினம்.


இத்தகைய பிரச்சினைகள், சிறப்பாக வரையறைகள், இருப்பதை மனதிற்கொண்டு தொல்லியல் சான்றினை நோக்கினால், பரவலாக ஆதி இரும்புக் காலத்திலிருந்து ஆதி வரலாற்றுக் காலம் வரை காணப்படும் சவ அடக்கங்களில் சான்றுகள் ஓரளவுக்குத் தமிழர் என்று பரந்த பொருளில் வர்ணிக்கத்தக்க மக்கள் அங்கும் இங்குமாக வாழ்ந்ததைக் காட்டுகின்றன. சவஅடக்கங்கள் காணப்படும் இடங்களையும் அவற்றுக்கு அண்மையில் காணப்படும் பிராமிக் கல்வெட்டுக்களின் சான்றினையும் இக் கல்வெட்டுக்களிலும் மட்பாண்ட ஓடுகளில் உள்ள குறியீடுகளையும் ஒருங்கே எடுத்துநோக்கினால், சில சுவையான தகவல்கள் கிடைக்கும். இதனைப் பேராசிரியர் ஸெனெவிரத்ன் எடுத்து விளக்கியுள்ளார்.


தமிழ் நாட்டில் ஆதி வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்த பல்வேறு சமூகக் குழுக்களுள் ஒன்று வேளிர் என்ற குழு. இன்னொன்று பரதர் என்ற குழு இக்குழுக்களைச் சேர்ந்தோர் பற்றிச் சங்கச்செய்யுள்களில் பல தகவல்கள் உள்ளன. இக்குழுக்களைச் சேர்ந்தோர் ஆதி வரலாற்றுக் காலத்தில் இலங்கையிலும் வாழ்ந்தனர் என்பதற்குத் தொல்லியல் சான்றும் கல்வெட்டுச் சான்றும் இருக்கின்றன என்பதைப் பேராசிரியர் ஸெனெவிரத்ன எடுத்துரைத்துள்ளார்.

பரதர் என்ற குழுவினர் சங்கச் செய்யுள்களிலே பலமுறை குறிப்பிடப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டின் கரையோரப் பட்டினங்களில் இவர்கள் வணிகர்களாகவும் கடல்சார் தொழில்கள் புரிவோராகவும் செல்வாக்குப் பெற்றிருந்தனர். இலங்கையில் உள்ள ஆதி வரலாற்றுக் காலத்துப் பிராமிக் கல்வெட்டுக்கள் பலவற்றில் பரத மற்றும் பத என வரும் பெயர்களைப் பரதரைக் குறிக்கும் பெயர்களாக அடையாளம்

பேராசிரியர்
கா. இந்திரபாலா

கண்டு, கல்வெட்டுக்களில் காணப்படும் குறியீடுகளைக் கடல் வணிகத்துடன் தொடர்புடைய குறியீடுகளாகச் சுட்டிக்காட்டியதுடன், பரதர் கல்வெட்டுக்களில் திராவிட உறவு முறை எனக் கருதப்படும் உறவுமுறைகள் வெளிப்படுவதையும் பயன்படுத்தி இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் பலமுறை குறிப்பிடப்படும் பரத/ பத குழுவினரும் தமிழ்நாட்டின் பரதர் குழுவினரும் ஒரே சமூகக் குழுவினர் என்ற கருத்தைப் பேராசிரியர் ஸெனெவிரத்ன முன்வைத்துள்ளார். (தொடரும்)





புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் உடுவில் கோட்ட முதன்மை ஆசிரிய ஆலோசகர் திருமதி ரி.தயாபரராசா மங்கல விளக்கேற்றுவதையும், அருகில் கௌரவ விருந்தினரான திருமதி இ.விக்னேஸ்வரன், அதிபர் சி.மணியம் ஆகியோர் நிற்பதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அச்சுவேலி மக்கள் வங்கி முகாமையாளர் இ.யோகராசா வெற்றியீட்டிய மாணவர்களுக்கு வெற்றிக்கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# சுதேச நாட்டியம் பத்திரிகையும் [1902-1915]

# கல்லடி வேலனும் 10

சுதேச நாட்டியம் பத்திரிகையின் இரண்டாவது பிரசுரத்தின் முதற் பக்கத்தில் எழுதப் பட்டிருந்த கோரிக்கை பின்வருமாறு அமைந்திருந்தது. அக்காலப் பத்திரிகைகள் பற்றிய சில தகவல்களை இதன்மூலம் பெறக் கூடியதாக இருப்பதால் அதனை இங்கே தருகிறேன்.

அடியேம் மேல் அன்பகலாத நண்பீர்! எமது பத்திரிகையின் கையொப்ப நண்பர் எமது பத்திரக்கிரயத்தை முந்தக் கட்டாததினாலும், எமக்குப் பிறவூர்க்குச் செலவழிந்துபோம் பத்திரத்தொகை சுமார் முறை ஒன்றுக்கு 1500 வரையளவில் இருப்பதாலும், இத்தொகைய பத்திரத்தை ஒருவருடம் அனுப்பும்போது அதனால் எமக்கு முத்திரைக்கு வருஞ் செலவு சுமார் வருடம் ஒன்றுக்கு 750 ரூபா வரையில் வருதலாலும், முதன்முறையில் இத் தொகைய முத்திரைத் தொகையை எம் கைப்பொறுப்பிற் செலவிட்டு அனுப்ப நாம்" கொடி பெறாத நொய்யரிசி" நிலையினமாயிருத்தலானும் எழுந்த எமது ஆற்றாமையால் முதல் வருடத்துக்கு அப்பொறுப்பை உங்கள்மேற் சுமத்தி முத்திரை ஒட்டாது அனுப்ப யோசித்து அவ் வழியை அனுட்டித் தோம். பத்திரிகா விகிதத்தில் ஒவ்வோரிடங் களுக்கும் குறித்தீருக்கும் தொகையைக் காணலாம். முத்திரைச் செலவு உங்களுக்கு 2 சதத்திற்கு 4சதமும், 3 சதத்திற்கு 6 சதமு மாய் இரட்டிப்பதால் அத் தொகையைத் தள்ளி வருமதியாயிருக்கும் எஞ்சிய தொகையை முற்பணமாயனுப்பி விடும்படியும், அவ்வாறனுப்பப்படும்போது முத்திரைச் செலவை நாம் பொறுப்பது கூடியதாயிருக்கும் என்பதையும், மிக்க வேண்டுதலோடு உங்களுக்கு அறியத் தருகின்றோம். "எனக்குத் தம் பத்திரிகை அனுப்ப வேண்டும் அதை ஆவலோடு எதிர்பார்த்திருக்கின்றேன்'' என இதுவரையில் அவ்வவ்விடங்களிலிருந்து ஏறக்குறைய 350 பெயர் வரையில் தம் விலாசத்தை அனுப்பினர். அவர் போலவே மற்றைய நண்பரும் தேடி எமது பத்திரிகையை வாங்குவரென்பது எமது பூரண சித்தாந்தம்' (சு.நா. 29.09.1902). இவ்வாறு மிகவும் நிதானமாக எழுதி, பத்திரிகைக்கான கிரயத்தை கேட்டு வந்த கல்லடி வேலன், பிறிதோர் இதழில் சற்றுக் காரசாரமாக எழுதிக் கேட்பதையும் காண முடிகிறது.

" கையொப்ப நண்பீர்! எமது பத்திரிகையின் மூன்றாம் புத்தகமும் வெளிப்பட்டு, மூன்று நாலு மாசங்களாகிறதே!! நீர், உம்மால் வரவேண்டிய பணத்தை இன் னும் அனுப்பாதிருப்பது நீதியா? உங்கள் போல் யோக்கியதையும் நல்ல றிவும் உள்ள பிரபுக்கள் எங்கள் முயற்சியையும் பொருட் செலவையும் சிந்தித்து... உம்மால் வரவேண்டிய பணத்தை அனுப்ப ஏவப்படாது, தோணி துறையிற்கிடப்பது போற் கிடப்ப தற்கு நியாயமென்ன?

சொற்ப பணமென்பதா?, கொடுக்கிறதில்லை என்பதா?, அவசியமல்ல என்பதா?, முட்டுப்பாடா?, மறதியா?, வெட்கமா?, அனுப்ப வழி தெரியாமையா?, நேரமில்லையா?, பணம் கொடுத்ததை யோக்கியர் அறிந்தால் பரிகாசஞ் செய்வார் என்பதா?, வழக்கமில்லையா?

இவைகளிலொன்றானால் அதை இரகசியமாக எமக்கு எழுதி அறிவிக்கப்படாதா? இன்னார் தரவேண்டும். இன்னார் தரவேண்டுமென்னாது பொதுவாய் நாம் எழுதுவதால் என்னையல்ல, அவரையென்று எண்ணுகின்றீரா? நாமிப்படி இன்னாரென்று குறியாதிருப்பதற்கு ஞாயம் உமது அறிவிற்குத் தெரியவில்லையா? தயவு செய்து கவனியும்! கவனியும்!! என்று ஆயிரமுறை எழுதவும் கவனயீனமேன், இன்றும் பழம் பாடத்தையே எழுதி உம்மை ஆயிர நமஸ்காரத்தோடு கேட்டுக்கொள்கின்றோம் (சு.நா. 23.01.1905)

பத்திரிகையின் பொருள் வளம், சந்தாவிற்கு அடுத்த படியாக, விளம்பரங்கள் வாயிலாக கிடைத்ததெனக் கூறமுடியும். பத்திரிகையின் நான்கில் ஒரு பகுதி விளம்பரங்களால் நிரப்பப்பட்டிருந்தது.

#### கல்லடி வேலன் என்ற பத்திராதிபர்

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், பத்திரிகை நடத்துதல் என்பது மிகவும் இலகுவான காரியமாக இருக்கவில்லை. மிகவும் பிரயத்தனப்பட்டு வாசகர்களையும் இழக்காமல், பத்திரிகையையும் நிறுத்தாமல் நடத்துவதென்பது, வசதி அதிகம் இல்லாத தனி நபர்களுக்கு ஒரு சவாலாகவே இருந்திருக்கும். அக்காலத்தில் ,ஆரம்பிக்கப்பட்ட பல பத்திரிகைகள் விரைவிலேயே இத்தகைய சவால்களைச் சமாளிக்க முடியாது ஒழிந்துபோக சுதேச நாட்டியம் நீடித்து நிலை பெற்றமை அதுவும், ஏறத்தாழ அரை நூற்றாண்டு நீடித்து நிலைத்தமை பத்திரிகை நடத்தியவரின் சாதனை என்றே குறிப்பிடவேண்டும். அடிப்படையில்

திருமதி.சோ.கிருஷ்ணகுமார்
சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

கல்லடிவேலன் ஒரு சிறந்த பத்திரிகையாளனாக இருந்தமையே இதன் வெற்றியை நிர்ணயித்தது எனக் குறிப்பிடுவதில் தவறியிருக்க முடியாது. ஏனெனில் மாறிவரும் சூழ்நிலைகளுக்கும், வாசகர்களின் எதிர்பார்ப்புக்களுக்கும் ஏற்ற வகையில் அவர் பத்திரிகையை ஆக்கி வெளிப்படுத்தியமையே அதன் நிலைப்பிற்கு அடிப்படையான காரணமாக இருக்கவேண்டும். (தொடரும்)

## திரை விமர்சனம்





# வெண்ணிலா கபடிகுழு

வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டியவர் கள் விரும்பிப் பார்க்க வேண்டிய படம் வெண்ணிலா கபடி குழு என்று சான்றிதழ் தரலாம். அத்தனை பிரமாதமான படமல்ல... பாடம் இது! லகான் இந்திப்படம் மூலம் கிரிக் கெற் விளையாட்டை சினிமாவில் படம் பிடித்துக் காட்டிய அமீர்கானை தூக்கிச் சாப்பிட்டு விட்டார் கள் வெண்ணிலா கபடி குழு படக்குழுவினர். தமிழர்களின் வீர விளையாட்டான கபடியை கலக்கலாக காட்டிய இயக்குநர் சுசீந்திரனை பாராட்ட லாம்.

கபடி விளையாட்டு மீது தீராத காதல் கொண்ட ஹீரோ மாரிமுத்துவிற்கு அதை ஆட சந்தர்ப்பங்கள் அமை யாமல் நழுவிக் கொண்டே போகிறது. சின்ன வயதிலேயே அப்பாவை இழந்து, பண்ணையில் அவர் பார்த்த ஆடு மாடு மேய்க்கும் வேலையைப் பார்க்கப் பணிக்கப்படுகின்றார். குடும்பச் சூழல் காரணமாக படிப்பும் பாழாய்ப்போய், தனக்குப் பிடித்த கபடியையும் விளையாட முடியாமல் கஷ்ட ஜீவனம் நடத்தும் மாரி, ஒரு கட்டத்தில் கபடி ஆடி, தன் டீமே ஜெயிக்கக் காரணமாகிறார். அவரை ஊரே கொண்டாடும் வேளையில் மைதானத்திலேயே அவரது உயிரும் பிரிவதாக கதை முடிகிறது!! மாரியையே நம்பியிருக்கும் அவரது தாய் ஜானகியும், காதலி சரண்யா மோகனும் என்ன ஆனார்கள்? என்பது சொல்லப்படாமல் கவித்துவமாக படத்தை முடித்திருப்பது சபாஷ் போட வைக்கிறது!

ஹீரோ மாரிமுத்துவாக புது முகம் விஷ்ணு சற்றே சோகம் வழியும் கண்களும், முகமுமாக முழுவதும் படம் பார்க்கும் நம்மை ஆட்கொண்டு விடுகிறார். நம்மில் ஒருவராக இயல்பான நடிப்பில் வெளுத்து வாங்கியிருக்கும் விஷ்ணுவிற்கு தமிழ் சினிமாவில் பிரகாசமான எதிர்காலம் இருக்கிறது என்றால் அது மிகையல்ல! விஷ்ணு மட்டுமல்ல அவரது நண்பர்களாக வாழ்ந் திருக்கும் நிதிஷ், சுந்தர், அப்புக்குட்டி, சூரி, பாண்டி என எல்லோரும் பிரதமாதமான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இவர்கள் எல்லோரையும் விட பிரமாதமாக நடித்திருக்கிறார் கபடி கோச் சவுட முத்துவாக பின்பாதி முழுக்க வரும் வில்லன் நடிகர் கிஷோர்.




ஹீரோ விஷ்ணுவின் அம்மாவாக ஜானகி, ஹீரோயின் சரண்யா மோகன் மற்றும் ஒரு புதுநாயகி என எல்லோரும் தங்கள் பங்கைச் சரியாகச் செய்து வெண்ணிலா கபடி குழுவினரை வெற்றிக்குழுவினர் ஆக்கியிருக்கிறார்கள்.

படத்தின் கதையோடும், காட்சிகளோடும் மெலிதாக இழையோடி மெல்ல...மெல்ல... புன்னகை வரவழைக்கும் காமெடியும், பாஸ்கர் சக்தியின் வசனக் காட்சிகளும் படத்திற்கு பெரும்பலம். உதாரணத்திற்கு சைக்கிளில் பஸ்ஸை முந்தும் ஹீரோ விஷ்ணுவிற்காக பிரேக் அடித்து அவரை முன்னே செல்ல விட்டு, அந்த டிரைவர் அடிக்கும் கமெண்ட் ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் என்பதை உணர்த்துகிறது. ஜெ.லட்சுமண்ணி ஒளிப்பதிவும், வி.செல்வகணேஷின் இசையும், புதியவர் சுசீந்திரனின் கதை, திரைக்கதை, இயக்கத்திற்கு பெரும் பலம்.

**வெண்ணிலா கபடிகுழு: வெற்றிக்குழு**

# பெயர் மாறிய ஹீரோ



தலைகீழாக நின்று பார்த்தும் வெற்றி மட்டும் ஜெய் ஆகா ஷின் கிட்டே யே நெருங்கவில்லை. இதனால் தலைகீழ் மாற் றம் ஒன் றை செய்திருக் கிறார் அதிரடியாக. இனி இவரது பெயர் ஜெய் ஆகாஷ் அல்ல, ஆகாஷ் ஜெய்.

இந்த தலைகீழ் மாற் றத்திற்கு ஐடியா கொடுத்தது அடடா என்ன அழகு படத் தின் இயக்குநர் டி.ஜெய முருகன். பெயரை மாற்றியதால் இனியெல்லாம் வெற்றி தான் என ஆகாஷை உசுப்பிக் கொண்டிருக்கிறார் இவர்.

இவரைப் போல ஏற்கனவே இருவர் பெயரை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். விக்னேஷ் விக்னேஷ்வரானாகவும், அருண்குமார் அருண் விஜய்யாகவும் மாறியிருக் கிறார்கள். இவர்களை வெற்றி தீண்டுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

சினிமா

# கொஞ்சம் பொம்மை ரஜினி கொஞ்சம் உண்மை ரஜினி



அனிமேஷன் படம்தானே என அசால்டாக இருந்த நம்மை 'சுல்தான் தி வாரியர்' பட செய்தி அலேர்ட்டாக்கியுள்ளது. ஆக்கர் ஸ்டூடி யோ பெயரில் சொந்தப் பட நிறுவனத்தை தொடங்கியிருக்கும் சௌந்தர்யா ரஜினியின் முதல் தயாரிப்பே அப்பா சம்பந்தப்பட்ட படம்தான். 'சுல்தான் தி வாரியார்' எனப் பெயரிடப்பட்டிருக்கும் இப் படம் ஒரு அனிமேஷன் படம். இந்தி யாவைப் பொறுத்தவரை அனிமேஷன் படங்கள் பெரிய அளவிலான வெற்றியையோ, வசூலையோ பெற்றதில்லை. ஆனால் இந்த இரு சாதனைகளையெல்லாம் 'சுல்தான் தி வாரியர்' நிகழ்த்திக் காட்டும் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறார் சௌந் தர்யா.

காரணம் கதையின் நாயகன் ரஜினிதான். இவரது ஜோடி யாக விஜயலக்ஷ்மி நடிக்கிறார். அனிமேஷன் படமென் றாலும் ரஜினி நிஜமாக நடித்த காட்சியை அடிப்படையாகக் கொண்டே கம்ப்யூட்டர் தொழில்நுட்பம் மூலம் அனிமேஷன் செய்யப் படுகிறது.

வெறும் அனிமேஷன் என்றால் ரசிகர்களை கவர்ந்தி ழுக்கும் தன்மை இருக்காது என்பதால் அனிமேஷன் தவிர நிஜமான ரஜினியும் படத்தில் தோன்றுவதுபோல உருவாக் கப்பட்டு வருகிறதாம். அதாவது கொஞ்சம் பொம்மை ரஜினியும், கொஞ்சம் உண்மை ரஜினியு மாக மாறி மாறி வருகிறார்களாம். பெரும்பான்மையான காட்சிகள் ராமோஜிராவ் பிலிம் சிட்டியில் பிரம்மாண்ட செட் போட்டு எடுக்கப்பட்டுள்ளது. அனிமேஷன் உருவத்திற்கும் ரஜினியே டப்பிங் கொடுக்கிறாராம். தமிழ், தெலுங்கு உள்ளிட்ட சில இந்திய மொழிகள் தவிர ஜெர்மன் உள்ளிட்ட 15 உலக மொழிகளிலும் 'சுல்தான்' உருவாகி வருகிறது. அனிமேஷன் அமைப் பதற்கான செலவு மட்டும் பத்துக் கோடியைத் தாண்டும் எனக் கூறப்படுகிறது.

# ஹீரோயினாகும் ஷாலினி சிஸ்டர்



குழந்தை நட்சத்திரமாக இருந்து கதாநாயகியானவர் களின் பட்டியலில் புதிய வராகியிருப்பவர் ஷாம்லி. விரல் நுனியை பற்றிக்கொண்டு பாதம் ஊன்றி நடந்த அழகு, காற்றில் ஆடிய கலைந்த முடிகள், ப்பே...ப்பே.. என்ற மழலை பேருரை என அஞ்சலியில் பார்த்து ரசித்த குட்டி ஷாம்லி இப்போது குமாரி ஷாம்லி. மூன்று வருடங்களாக எப்போது கிடைக்கும் இவரது கால்ஷீட் என ஷாமிலியை நாயகியாக்க முட்டி மோதிக் கொண்டிருக்கும் தமிழ் இயக்குநர்கள் நிறைய. ஷாமிலியின் ஹீரோயின் அவதாரமோ தெலுங்கு பக்கம் தொடங்கியுள்ளது. தமிழில் சரியான கதை கிடைக்காததா லேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாம். இதுதவிர முன்னணி ஹீரோக்களுக்கு ஜோடியாக மட்டுமே அறி முகமாக வேண்டும் என அக்கா ஷாலினியும், மாமா அஜித்தும் ஐடியா கொடுத்துள் ளனராம். எனவே புதுமுக நாயகனுக்கு ஜோடியாக நடிக்க கேட்டு வந்த வாய்ப்புகளை உதறி தள்ளிவிட்டார் ஷாம்லி.

ஆனால் தெலுங்கிலும், மலையாளத்திலும் தலா ஒரு படத்தில் நடித்துக் கொண் டிருக்கிறார். மலையாளத்தில் சிகரி என்ற படத்தில் மோகன்லாலுவின் மகளாக நடிக்கிறார். இப்படத்தை பத்மகுமார் இயக்கு கிறார். இந்தப் படம் முடிந்த கையோடு தெலுங் கில் கதாநாயகியாக அறிமுகமாகிறார் படத்தின் நாயகன் சித்தார்த். இதற்கிடையே தமிழில் நல்ல கதையும் முன்னணி இளம் நடிகருக்கு ஜோடி யாகவும் நடிக்கும் வாய்ப்பு வந்தால் மட்டுமே தமிழில் கதாநாயகியாக நடிப்பது என்ற முடிவில் இப்போதும் உறுதியாக இருக்கிறார் ஷாம்லி.

# கந்தசாமிக்காக 4 பாட்டு பாடிய விக்ரம்



வி.கிரியேஷன்ஸ் சார்பில் கலைப்புலி எஸ். தாணு தயாரிக்கும் பிரமாண் டமான படம் கந்தசாமி. இந்த படத்தில் நடிகர் விக்ரம் ஹீரோவாக நடிக்க அவருக்கு ஜோடியாக ஸ்ரேயா நடிக் கிறார். சுசி கணேசன் இயக் கத்தில் உருவாகி யுள்ள இப்படத்திற்கு தேவிஸ்ரீ பிரசாத் இசையமைத்துள் ளார். படத்தில் இடம்பெறும் 4 பாடல்களை பாடலாசிரி யர் விவேகா எழுதியிருக்கிறார். அந்த 4 பாடல்களையும் நடிகர் விக்ரமே பாடியிருக்கிறாராம். இதுபற்றி படத்தின் இயக்குநர் சுசி கணேசன் கூறுகையில், முதலில் விக்ரமை மூங்கில் காடுகளே... எனத் தொடங்கும் ஒருபாடலை மட்டும் பாட வைக்க முடிவு செய்தோம். பின்னர் அவரது ஆர்வத்தால் 4 பாடல்களையும் பாடி விட்டார் என்றார். தமிழில் மட்டுமல்ல இப்படத்தின் தெலுங்கு மற்றும் இத்தாலி மொழி களிலும் விக்ரம் தான் பாடல்களைப் பாடியிருக்கிறார் என்பது கொசுறு தகவல்.


# நேற்றைய வரலாற்றின் ஏமாற்றத்தால் இந்த முருகதாசன் தீக்குளிக்கிறான்

**ஈழத்தமிழர்களைக் காப்பாற்றக்கோரி சுவிற்சர்லாந்தின் ஜெனீவாக நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் முன்றலில் பெப்ரவரி 12ஆம் திகதி இரவு 8.15 தொடக்கம் 9.45 க்குள் தீக்குளித்து தன் உயிரை நீத்த, லண்டனில் வசித்து வந்த ஈழத்தமிழன் முருகதாசன் எழுதி வைத்துச் சென்ற மரண சாசனம் இங்கே வெளியாகின்றது.**

## சுவிற்சர்லாந்தில் தீக்குளித்த முருகதாசன் எழுதிய உருக்கமான கடிதம்

### உலக சமூகத்துக்கு தமிழினத்தின் சார்பில் என் ஆத்மார்த்த வேண்டுகோள்

என் இனத்தின் அழிவைத் தடுத்து நிறுத்த தவறிய உலகமே, உங்களின் மன சாட்சியை



தீக்குளித்த தமிழ் இளைஞன் முருகதாசன்

தட்டியெழுப்ப என்னுடைய இனிய உயிரை வழங்குகின்றேன்.

எனது பெயர் முருகதாசன்

பிறந்த திகதி 02.12.1982

இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து லண்டனில் வசிக்கும் தமிழ் இனத்தைச் சேர்ந்தவன்.

இலங்கையில் வாழும் தமிழ் இனம் பெரும்பான்மைச் சிங்கள இனத்தின் அரசால் நசுக்கப்பட்டு வதைக்கப் பட்டுக்கொண்டிருக்கின்றது, அதனை நீங்கள் எவரும் தடுத்து நிறுத்தவில்லை பார்த்துக்கொண்டும் ஊக்கம் கொடுத்துக்கொண்டும் இருக்கின்றீர்கள்.

போர் தொடர்பான நடைமுறைகள், ஜெனீவா பிரகடனம், அடிப்படை மனித உரிமைகள், இன அழிப்பு அதற்கான சட்டங்கள், நடைமுறைகள் எல்லாவற்றையும் ஐ.நா. மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் என்பன வைத்திருக்கின்றன. தனது உறுப்பு நாடுகள் அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றெல்லாம் சட்டம் வைத்துள்ளீர்கள்–ஆனால் இவற்றையெல்லாம் மீறி எனது தமிழ் இனத்தை ஒட்டுமெத்தமாக இலங்கைத்தீவில் ஸ்ரீலங்கா அரசு படுகொலை செய்துகொண்டிருக்கின்றது.

இன்று வன்னியில் எனது நான்கரை இலட்சம் தமிழ் உறவுகள் எப்படிக் கொடூரமாக வதைக்கப்படுகின்றார்கள். என்பதை உலகின் பிரதிநிதிகளான ஐ.நா. அதிகாரிகளும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளும் அங்கிருந்து வெளியிடும் அறிக்கைகளில் இருந்தே தெரிந்துகொண்டிருப்பீர்கள்.

வன்னியில் என் இனத்தின் நான்கரை இலட்சம் பேர் ஒரு குறுகிய பகுதிக்குள் முடக்கப்பட்டு ஸ்ரீலங்கா அரச படைகளால் நாள் தோறும் எறிகணைத்தாக்குதல்கள் மூலமும் வான் குண்டுத்தாக்குதல்கள் மூலமும் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான என் உறவுகளின் பிணங்கள் வீதிகள் எங்கும் கிடப்பதை அறிந்த போது எனக்கு தாங்க முடியாத துயரமும் அதிர்ச்சியும் ஏற்பட்டது. நாள்தோறும் எமக்கு கிடைக்கும் செய்திகளில் வீதி வீதியாக கொல்லப்பட்டுக் கிடக்கும் என் இனத்துப் பாலகர்கள், பால்குடிக் குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், நோயாளர்கள் பற்றித்தான் தகவல்கள் வருகின்றன.

மருத்துவமனைகள் அங்கு பாதுகாப்பானவையாக இல்லை. மருத்துவமனைகள் கூட குறிவைத்துத் தாக்கப்படுகின்றன. மருத்துவமனைகளைத் தாக்குவதை ஸ்ரீலங்கா அரசே நியாயப்படுத்துகின்றது. அவர்கள் தொடர் தாக்குதல்களை நடத்தி மக்களை கொல்கின்றார்கள். வன்னியில் பயங்கரவாதிகள் இருக்கின்றார்கள் .அதனால் தாக்குவோம் என்கிறார்கள்.

உங்களின் மொழியில் கேட்கிறேன். பிறந்த குழந்தைகள் கொல்லப்படுகின்றார். கள். சிறார்கள் கொல்லப்படுகின்றார்கள் வயிற்றில் இருக்கும் சிசுக்கள் கூடக் கொல்லப்படுகின்றனர். அவர்களும் பயங்கரவாதிகளா?

மக்களை கொல்வது பயங்கரவாதம் என்கிறீர்கள் அங்கு தமிழ் மக்கள் அரசால் நாள் தோறும் படுகொலை செய்யப்படுகின்றார்கள். அவர்கள் இடம்பெயர்கின்றபோதும் இடம் பெயர்ந்து ஒரு இடத்தில் தரித்து நிற்கின்ற போதும் மருத்துவமனைகளுக்கு செல்கின்ற போதும் வீதிகளில் நடமாடுகின்ற போதும் என்று எங்கும் அவர்கள் கொல்லப்படுகின்றனர். கொத்துக்கொத்தாக அவர்கள் படுகொலை செய்யப்பட்டு கிடக்கிறார்கள்.

முல்லைத்தீவு சுதந்திரபுரச் சந்தித் திடலில் ஐ.நா.வின் உலக உணவுத்திட்ட அதிகாரிகள் கொடியை ஏற்றி நிலைகொண்டு நிவாரணத்தை வழங்கிக்கொண்டிருந்த போதும் அந்த திடல் மீது ஜனவரி 26ஆம் திகதி அன்று பகல் இரவாக ஏறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது அப் பகுதியில் இருந்த செஞ்சிலுவைக் குழு அலுவலகமும் தாக்கப்பட்டது. அன்று மட்டும் 302 மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். 1199பேர் படுகாயமடைந்தனர். அன்று அதிகளவில் உடையார்கட்டு மருத்துவமனை உள்ளிட்ட பகுதிகளெங்கும் பிணக்காடாக இருந்ததை எனது உறவினர் நேரில் பார்த்து தொலைபேசியில் சொல்லியபோது நான் அதிர்ந்து விட்டேன். யார் இருக்கிறார்கள் யார் மடிந்தார்கள் என்பதை அறியாமல் உயிருடன் இருந்தவர்கள் அந்த இடத்தை விட்டு ஓடினார். அவலங்களின் சாட்சியாக நின்ற ஐ.நா. அதிகாரிகளும் சர்வதேச செஞ்சிலுவைக்குழு அதிகாரிகளும் சிறிய பதுங்கு குழிகளுக்குள் பாதுகாப்பு தேடி இருந்துவிட்டு அவசர அவசரமாக அங்கிருந்து வெளியேறினர்.

அன்றைய நாளை மறக்க முடியாதளவுக்கு எனக்கு பெரும் மன அழுத்தத்தை ஏற்படுத்தியது. இது பற்றி ஐ.நா. பிரதிநிதிகள், செஞ்சிலுவைக்குழுப் பிரதிநிதிகள் அறிக்கை வெளியிட்டனர். அப்பகுதி பாதுகாப்பு வலயம் என்று ஸ்ரீலங்காவால் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதியாகும் இவ்வாறு தானே பாதுகாப்பு வலயம் என அறிவித்து அதில் பன்னாட்டு பிரதிநிதிகள் சாட்சியாக இருக்க இலங்கை அரசு தமிழ் மக்களைப் படுகொலை செய்து வருகிறது. நாள்தோறும் இத்தகைய தாக்குதல்கள் நடக்கின்றன. இது அரச பயங்கரவாதம் இல்லையா? அரசே நடாத்தும் இனப்படுகொலை இல்லையா?

இவ்வாறே போரின் போது மருத்துவமனைகள் இலக்கு வைக்கப்படக் கூடாது என்ற மரபையும் புறந்தள்ளி ஐ.நா. அதிகாரியும் பன்னாட்டு செஞ்சிலுவைக்குழுப் பிரதிநிதியும் நின்றவேளையில் ஸ்ரீலங்கா அரசப் படைகள் காயமடைந்த மக்களுக்கு சிகிச்சை வழங்கி வந்த புதுக்குடியிருப்பு மருத்துவமனை மீது பெப்ரவரி 2ஆம் திகதி தொடக்கம் 4ஆம் திகதி வரை குண்டுகளை வீசி நோயாளர்களை கொன்றதற்கு உங்களவர்களே சாட்சி.

4ஆம் திகதி இலங்கையின் சுதந்திரநாள் கொண்டாட்டம் . அன்றுதான் புதுக்குடியிருப்பு மருத்துவமனை முற்றாக அழித்துச் செயலிழக்கச் செய்யப்பட்ட நாளாகவும் அமைந்தது.

புதுக்குடியிருப்பு மருத்துவமனை தொடர் விமானக் குண்டுவீச்சுகளாலும் ஆட்லறி கொத்துகுண்டுகளாலும் தாக்கப்பட்ட போது அங்கு அப்பாவி மக்கள் 500 பேர் சிகிச்சை பெறுகின்றார்கள். என்பதை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி உறுதிப்படுத்தி தகவல் வெளியிட்டிருந்தார்.

இதேவேளை இதற்கு ஒரு கிழமைக்கு முன் ஜனவரி 26இல் உடையார்கட்டு மருத்துவமனை தாக்கப்பட்டு மக்கள் கொல்லப்பட்டது தொடர்பாக பி.பி.சி. நிறுவனத்திற்குப் பேட்டியளித்த ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார, புதுக்குடியிருப்பில் மருத்துவமனை இயங்கும் போது மக்கள் ஏன் உடையார்கட்டு



முருகதாசனின் உடலுக்கு அஞ்சலி செலுத்துதல்...

மருத்துவமனைக்கு போக வேண்டும்? எனக் கேட்டு உடையார்கட்டு மருத்துவனை மீதான தாக்குதலை நியாயப்படுத்தியிருந்தார். உடையார் கட்டுப் பகுதியை சில தினங் களுக்கு முன்னர்தான் பாதுகாப்பு வலயமென குறிப்பிட்டு அங்கு மக்களை ஒன்று கூடுமாறு இலங்கை அரசு அறிவித்திருந்த நிலையிலும் கூட அந்த மருத்துவமனை தாக்கப்பட்டிருந்தது. அதனை இராணுவப் பேச்சாளர் ஏற்றுக்கொண்டு நியாயப்படுத்தியுமிருந்தார்.

ஸ்ரீலங்கா இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார கூறிய அதே புதுக்குடியிருப்பு மருத்துவமனையே சில தினங்கள் கழித்து தாக்கப்பட்டது. பெப்ரவரி 2ஆம் திகதி தொடக்கம் 4ஆம் திகதி வரை குண்டுவீசி நோயாளர்கள் கொன் றொழிக்கப்பட்டார்கள். ஐ.நா. மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் குறித்த மருத்துவமனை வளாகத்தில் தங்கி நின்ற நிலையிலேயே ஸ்ரீலங்கா அரசபடைகள் மேற்படி மருத்துவமனை மீது தாக்குதலை மேற்கொண்டன.

பிரித்தானிய ஸ்கை ஒளிபரப்பு நிறுவனத்திற்கு பெப்ரவரி 3ஆம் திகதி அன்று வழங்கிய சிறப்பு நேர்காணல் ஒன்றில் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே எந்த வைத்தியசாலைகளும் இல்லை அதனால் புதுக்குடியிரப்பு மருத்துவமனை ஒரு நியாய பூர்வமான இலக்கு என்று வைத்தியசாலைகள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை நியாயப்படுத்தி இலங்கை ஜனாதிபதியின் சகோதரரும் பாதுகாப்புச் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷ கருத்துத் தெரிவித்துள்ளார்.


மருத்துவமனைகள் தாக்கப்படுவதை நியாயப்படுத்தியும் இனியும் மருத்துவமனைகள் தாக்கப்படும் என்பதை வலியுறுத்தியும் மேற்படி ஸ்ரீலங்கா அரசின் இராணுவப் பேச்சாளரும் மற்றும் ஜனாதிபதியின் சகோதரரும் பாதுகாப்புச் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் உத்தியோகபூர்வமாகவே உலக செய்தி நிறுவனங்களில் கருத்துக்களை வெளியிடுகின்றனர். சர்வதேச செய்தி நிறுவனங்களுக்கு இவ்வாறான ஒரு கருத்தை அவர்களால் கூறமுடிகின்றது. என்றால் மருத்துவமனைகள் தாக்கப்படுவது உலக நாடுகள் கொடுத்துள்ள அங்கீகாரம் என்று தானே பொருள்படும்.

முள்ளியவளையில் இயங்கிய முல்லைத் தீவு பொதுமருத்துவனை, வள்ளிபுனத்தில் இயங்கிய முல்லைத்தீவு பொதுமருத்துவமனை, விசுவமடுவில் இயங்கிய கிளிநொச்சி பொதுமருத்துவமனை, உடையார்கட்டில் இயங்கிய கிளிநொச்சி பொதுமருத்துவமனை, மூங்கிலாறில் இயங்கி மல்லாவி மருத்துவமனை, புதுக்குடியிருப்பு மருத்துவமனை என்பன மருத்து வமனைகள் என்பதற்காகவே தாக்கப்பட்டுள்ளன.

இரு தரப்புக்களையும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மதிக்கும்படி கோரும் இந் நாடுகளுக்கு வைத்தியசாலைகளைத் தாக்குவதன் மூலம் வேண்டுமென்றே தமிழர்களை இலக்கு வைக்கும் இலங்கை அரசு அதன் காரணமாக அந்தச் சட்டங்களை முழுவதுமாக மீறுகின்றது என்று நன்கு தெரியும்.

இலங்கை அரசினால் முன்னெடுக்கப்படும் இந்தக் கொள்கை நிலைப்பாடு மனித இனத்திற்கு எதிரான தீங்கியல் குற்றமாகும். இந்தக் கொள்கையை முன்னெடுக்கும் இலங்கை அரசின் போக்கால் சென்ற மாதம் மட்டும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்படவும் காயமடையவும் நேர்ந்துள்ளது.

(7ஆம் பக்கம் பார்க்க)




யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற மூலிகைத் திறவுகோல் எனும் நூல் அறிமுகவிழாவில் யாழ். மாநகரசபை பிரதம சித்த வைத்திய அதிகாரி டாக்டர் ப.சுரேசன் தலைமையுரை நிகழ்த்துவதையும், யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறைத் தலைவர் டாக்டர் திருமதி சி. பஞ்சராஜா, யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ வணிகபீட பீடாதிபதி க.தேவராஜா ஆகியோர் வாழ்த்துரை நிகழ்த்துவதையும்,முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாட் பேராசிரியருமான பொ. பாலசுந்தரம்பிள்ளை நூலினை வெளியிட்டு வைப்பதனையும் படங்களில் காணலாம். (படங்கள்: அலுவலகச் செய்தியாளர்)

# நேற்றைய வரலாற்றின் ஏமாற்றத்தால்....

(7 ஆம் பக்கத்தொடர்ச்சி)

எனது தமிழ் மக்கள் இலங்கைத் தீவில் படும் துயரத்தின்பால் உலகின் கவனத்தை ஈர்ப்பதற்காக எனது உயிரைக் கொடுக்கின்றேன். இந்த முடிவை எடுத்து நடைமுறைப் படுத்தும் இடைகாலத்தில் கூட தினம் தினம் நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் இலங்கைத் தீவெங்கும் வீதி வீதியாக கொல்லப்படுகின்றார்கள். என்ற செய்திகள் வந்தவண்ணமே உள்ளது.

இந்த மனிதத் துன்பியல் கொடூரம் மனிதாபிமான உதவிகள் தமிழ் மக்களுக்குக் கிட்டுவதைத் தடை செய்துள்ள இலங்கை அரசின் நடவடிக்கையால் மேலும் தாமதமாகியுள்ளது. அனைத்துலக சமூகம் இந்த உண்மைகளை முழுமையாக அறிந்துள்ள போதிலும் பன்னாட்டு மனிதாபிமான சட்டங்களை பின்பற்றுமாறு இலங்கை அரசிற்கு கடும் அழுத்தம் கொடுப்பதைத் தவிர்த்து இலங்கை அரசிற்கு படை மற்றும் பொருண்மிய உதவிகளை வழங்கி வருகின்றமை பெரும் துர்ப் பாக்கியமாகும்.

தமிழ் தேசம் சிங்கள தேசம் ஆகியவற்றின் வாழ்விடமே இலங்கைத் தீவு என்பது தமிழ் மக்களின் உறுதியான மாற்றமுறாத கருத்து நிலைப்பாடாகும். இந்த யதார்த்தத்தை அங்கீகரிக்கும் அடிப்படையில் தான் இரு தேசங்களினதும் உண்மையான பிரதிநிதிகள் அதாவது இரண்டு தேசங்களினதும் எதிர்கால பாதுகாப்பு பரஸ்பர நலன் போன்றவற்றிற்காக எவ்வாறு இரண்டு தேசங்களும் கூடிச் செயற்பட்டு தமிழரின் தேசிய பிரச்சினைக்கு நீதியான நீடித்து நிற்கக்கூடிய தீர்வைக் காணலாம் என்பது குறித்து பேச்சுக்களில் ஈடுபட வேண்டும்.

இலங்கைத்தீவு முழுவதும் சிங்கள இனத்தவருக்கு உரித்தானது என்ற கொள்கை நிலைப்பாட்டினால் தான் சிங்களவர்களோடு சமத்துவமாக வாழும் ஓர் அரசியல் ஏற்பாட்டை பேச்சு மூலம் காண்பதற்கு தமிழினம் எடுத்த அனைத்து முயற்சிகளும் தோற்றுப் போயின சமத்துவமான தமிழ் தேசம் உள்ளது என்ற இந்த யதார்த்தத்தை ஏற்று அங்கீகரிப்பதற்கு மறுத்த இந்த பௌத்த சிங்கள இன ரீதியான தேசியவாதமே இன அழிப்பு நோக்கிலான போர் வழித் தீர்விற்கு இலங்கை அரசைத் தள்ளியுள்ளது.

பிரிட்டன் அந்தத் தீவின் பெரும்பான்மை இனமான சிங்களத்திடம் ஆட்சியை விட்டுச் சென்ற வரலாறும் தெரியும் இந்த உரிமைகளுக்காக அறவழியில் தமிழிழனம் போராடியபோது அதை சிங்கள அரசு வன்முறை கொண்டு அடக்கியதனாலேயே தமிழினம் அடிக்கு அடிகொடுக்க வேண்டிய ஆயுதப் போராட்டத்துக்கு தள்ளப்பட்டது.

அதாவது தமிழ் மக்களுக்கு எதிரான இலங்கை அரசின் படை மற்றும் பௌதீக ரீதியிலான அடக்குமுறையை எதிர்த்து நிற்பது அவசியம் என்பதும் அதுவே ஆயுதம் தாங்கிய தமிழர்களின் எதிர்ப்புப் போராட்டத்தைத் தூண்டியது என்பதையும் உலகம் கவனிக்க வேண்டும்.

தமிழ் தேசம் என்ற உண்மை இருப்புநிலையை தனது இனவழிப்பு செயற்பாடு மூலம் சிதைத்து அழிப்பது தான் இலங்கை அரசு தொடுத்துள்ள போரின் நோக்கமாகும். இதை அங்கீகரிப்பது போல கடந்த 3ஆம் திகதி நோர்வே, ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் (அல்லது இணைத் தலைமை நாடுகள்) விடுத்த கூட்டறிக்கை அனைத்து தமிழர்களின் மனதையும் ஆழக் காயப்படுத் தியுள்ளது.

அதாவது தமிழ் மக்களது உரிமைப்போரினதும் சிங்கள இனவாதத்தினதும் அடிப்படைகளைத் தெரிந்துகொண்டுமே இணைத் தலைமை நாடுகள் இலங்கை அரசிற்குச் சார்பாகவும் தமிழ்மக்கள் தமது உரிமைப் போரைக் கைவிடவேண்டும் என்றும் கூறி அறிக்கை வெளியிட்டமையும் கூட எனக்கு ஏமாற் றத்தை ஏற்படுத்தியது.

ஒரு இனம் தனது உரிமைகளைக் கேட் பது தவறு என்று உலகம் கருதுகின்றதா? குறிப்பாக ஐ.நா. அவ்வாறு தான் கருதுகின்றதா? உலகத்தில் ஏன் தமிழ் இனத்துக்கு மட்டும் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. அல்லது உரிமை மறுப்புக்கு உலகம் ஆதரவு கொடுக்கின்றது. அந்த மறுப்புக்கு ஏன் உலகம் துணைபோகின்றது? நாம் ஏன் அடிமைகளாக இருக்க வேண்டும் என உலகம் நினைக்கின்றது.

இன்று ஒரு அரசு பிரகடனப்படுத்தி ஒரு இனத்தை அழித்துக்கொண்டிருப்பது தெரிந்தும் உலகமே அதனைத் தடுக்கவில்லை அறிக்கைகளை மட்டும் வெளியிட்டு விட்டு அமைதியாகி விடுகின்றன. ஆனால் அந்த அமைதியை நீங்கள் அந்த அரசின் இன அழிப் பிற்கு கொடுத்த அனுமதியாக கருதியே இலங்கை அரசு இன அழிப்பை தீவிரப்படுத்தியுள்ளது. ஒரு இனத்தின் அழிவைத்தான் நீங்கள் வரலாற்றில் எழுதிக்கொண்டிருக்கின்றீர்கள். இன அழிப்பைச் செய்யும் அந்த நாட்டுக்கு நீங்கள் ஏன் அழுத்தம் கொடுக்கிறீர்கள் இல்லை? இது தான் உங்கள் நடு நிலையா?

1958முதல் இன்று வரை தமிழனத்துக்கு உரிமைகள் வழங்கப்படுவதாக கைச்சாத்திடப்பட்ட உடன்பாடுகள் எல்லாம் இலங்கை அரசால் பல தடவைகள் குறிப்பாக கடைசி நோர்வே போர்நிறுத்த உடன்பாடு வரை கிழித்தெறியப் பட்ட வரலாறு எல்லோருக்கும் தெரியும்.

கடைசியாக நடந்த பேச்சுக்களின்போது இணைத்தலைமை நாடுகள் இலங்கைக்கு சார்பாகவே செயற்பட்டன. இந்த பேச்சுக் காலத்தில் இலங்கை படைத்தரப்பு தன் படையை பலப்படுத்தவே பயன்படுத்தியது என்பதும் தெளிவாகத்தெரிந்தது. பேச்சுக்களின் காலங் களை தமிழரை ஏமாற்றும் காலங்களாகவே இலங்கை அரசு பயனப் படுத்தியது.

மக்களை சுதந்திரமாக நடமாட விட வேண்டும் என்று சொல்கின்றீர்கள் இலங்கை அரசு எமது தமிழ் மக்களை ஆட்சிபுரிய அனுமதிக்க வேண்டுமென மறைமுகமாகச் சொல்கிறீர் கள் இலங்கை அரசு எமது தமிழ் மக்களை ஆட்சி புரிய'அனுமதிக்கவேண்டுமென மறைமுகமாகச் சொல்கிறீர்கள்.

ஒரு புறம் இலங்கை அரசு கட்டுப்பாட்டுப் பகுதிகளில் எனது இன மக்கள் கடத்தப்பட்டு கைகள், கால்கள், கண்கள் கட்டப்பட்டு, படுகொலை செய்யப்பட்டு வீதிகளில் அநாதரவகப் போடப்படுகின்றார்கள். இவற்றைச் செய்வது யார் என்று புள்ளிவிபரங்கள் எல்லாவற்றையும் மனித உரிமை நிறுவனங்கள் கண்டித்து அறிக்கை வெளியிட்டும் நீங்கள் எவருமே அவற்றைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கவில்லை. அதற்கு மாறாக அப் பகுதிகளில் மக்கள் சுதந்திரமாக நடமாட லாம் என்கின்றீர்கள்.

ஈராக்கிற்கு அடுத்த படியாக உலகளவில் இலங்கையிலேயே அதிகளவில் மக்கள் காணாமல் போகின்றனர். என்பதை உலக மனித உரிமைகள் அமைப்புக்கள் அடையாளப்படுத்தியும் நீங்கள் எவரும் அவற்றிற்கு பரிகாரம் காணாது அப்பகுதிகளினுள் மக் களை போகும்படி கூறுகின்றீர்கள்.

இலங்கை அரசின் ஆளுகையில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக எமது தமிழ் மக்கள் கடத்தப்பட்டும் காணாமற்போயும் உள்ளமை உங்களுக்குத் தெரியாதா? நூற்றுக் கணக்கில் அல்லாமல் ஆயிரக் கணக்கில் நடை பெற்று முடிந்த இவ்வாறு காணாமற் போவதற்கு எதிராக உலகநாடுகள் என்ன செய்தன.

இணைத்தலைமை நாடுகளின் பின்புலத்தில் நோர்வேயின் அனுசரணையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைக் காலத்திற்கூட நூற்றுக்கணக்கான தமிழ்மக்கள் இலங்கைத் தீவெங்கும் இலங்கை அரச படைகளால் இரகசியமான முறையில் காணாமல் போகச் செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டமைக்கு எதிராக உலகநாடுகள் எதனைச் செய்தன.

இறையாண்மை என்ற பேரில் நடக்கும் இந்த இன அழிப்பை நீங்கள் அனுமதிக்கிறீர்கள். தமிழினத்தின் மீது இன அழிப்பைச் செய்வது இலங்கை அரசு என்றவுடன் நீங்கள் இறையாண்மை பற்றி பேசத் தொடங்குகி றீர்கள். இறையாண்மை கொண்ட அரசின் உறவைப் பேணுவதற்காக அல்லது பாதுகாப்பதற்காக நீங்கள் இலங்கை அரசுக்கு ஆதரவளிப்பதாகவே நாங்கள் எல்லோரும் கருதுகின்றோம். தமிழர் உரிமைக்காகப் போரட்டம் செய்தால் வன்முறை அல்லது பயங்கரவாதம் என்றெல்லாம் சொல்லுகிறீர்கள். தமிழரை 1958 இல் இருந்து ஒரு அரசு அழித் துக்கொண்டிருப்பதை வன்முறையாக நீங் கள் பார்க்கவில்லையா? தமிழினம் இந்த பூமியில் வாழும் இனமில்லையா? அவர்கள் உரிமைகளுடன் வாழ உரித்துடையவர்கள் இல்லையா? நீங்கள் ஏன் எம்மை மட்டும் நசுக்க ஒத்துழைக்கிறீர்கள்?

புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் இருந்து எமது தமிழ் மக்கள் உங்களுக்கு உங்கள் மொழியில் அறவழியில் எனது இனத்தை காப்பாற்றுமாறு குரல்களை எழுப்பினார்கள் ஆனால் எதையும் நீங்கள் காது கொடுத்துக் கேட்கவில்லை. மிகக் கொடூரமாக வதைக்கப்படும் என் இனத்துக்கு என்னால் இங்கிருந்து எதையும் செய்யமுடியவில்லை. குறைந்தது ஆறுதல் சொல்லக் கூட என்னால் முடியாத கையறு நிலையில் இருப்பது குறித்து நான் வெட்கப்படுகிறேன். வேதனைப்படுகிறேன்.

இந்தச் சூழலில் புலம் பெயர் நிலையில் இருக்கும் எனக்கு அங்கு அவலப்படும் என் மக்களுக்கு செய்யக்கூடிய எதுவும் இல்லை. உங்களுக்கு அழுத்தமாக என் இனத்தின் சார்பில் எனது வேண்டுகோளைத் தெரிவித்து என் இனத்தைக் காக்கும் முடிவை எடுக்க வேண் டும் என்பத்றகாக எனது உயிரை தீயிற்குக் கொடுக்க முடிவெடுத்துள்ளேன்.

***உலக நாடுகளே***

***குறிப்பாக, இலங்கை அரசுடன் கைகோத்துள்ள இணைத்தலைமை நாடுகளே***

***ஐ.நா.நிறுவனமே***

ஒன்றைப் புரிந்துகொள்ளுங்கள். இலங்கை அரசு எமது தமிழ் மக்களக்கு செய்து வந்த கொடுமைகள் நீண்டவரலாற் றைக் கொண்டது. அந்த நீண்ட துன்பியல் வரலாற்றின் நிகழ் காலப் பரிமாணமாகவே, தமிழ் மக்களின் பிரச்சினையில் உலக நாடு களின் தலையீடும் ஏற்பட்டது. உலக நாடுகள் தலையிட்டபோது தமிழ்மக்களுக்கு நீதி கிடைக்கு மென தமிழ் மக்கள் நம்பினார்கள். ஏன் நானும் கூட நம்பினேன். ஆனால் நிகழ் காலத்தில் நாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டதை உணர்கின்றோம்.

இலங்கை அரசின் கபட நாடகத்திற்கு உலக நாடுகளும் துணைபோவதை கண்டதனாலேயே இந்த ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது. எனது தமிழ்மக்கள் தங்கள் தாய்நாட்டில் கொடுமைப் படுத்துவதைக் கண்டும் உலகம் பாராமுகத்துடன் இருப்பது மட்டுமல்லாமல் இலங்கை அரசை ஊக்குவித்து வருவது கண்டும் மனம் வெதும்பியே உலகப் பொது மன்றமாம் ஐ.நா. முன்றலில் தீயின் சாட்சியாக என்னை அர்ப்பணிக்க முடிவெடுத்தேன்.

எனது மக்கள் நிர்க்கதியாக விடப்பட்டதற்கும் இலங்கை அரசுடன் சேர்ந்து இணைத் தலைமை நாடுகள் இன அழிப்பிற்கு துணை போனதற்கும் சாட்சியாக ஐ.நா. மன்றத்தின் முன் இந்தத் தமிழன் முருகதாசன் தீக்குளித்தான் என்ற வரலாறும் சேரட்டும்.

ஒடுக்கப்பட்ட இனங்களுக்கு ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து நீதி கிடைக்கச் செய்வதில் ஐ.நா.வின் பங்கு எவ்வாறானது என ஆய்வு செய்யப்படும் போது ஒடுக்கப்பட்ட தமிழினத்தின் சார்பாக இலங்கைத் தமிழ் இளைஞன் முருகதாசன் தீக்குளித்து உயிர் கொடுத்தான் என்ற வரலாறும் சேரட்டும்.

இலங்கை அரசின் இன அழிப்பிற்கு துணை போகும் நாடுகளே, ஐ.நாவே இன் னொன்றையும் புரிந்துகொள்ளுங்கள் நேற் றைய வரலாற்றின் ஏமாற்றத்தின் சோக வெளிப்பாடாக இந்த முருகதாசன் தீக்குளிக் கின்றான். ஆனால் இன்றைய வரலாறு கடந்த காலமாகும். எதிர்காலத்தில் கோபம் கொள்ளும். தமிழரை அளித்தொழிக்க ஊக்குவித்து உதவி புரிவோர் மீது எமது வருங்காலச் சந்ததி கோபம் கொள்ளும்.

உலகத்தமிழினமே உங்களுக்கு ஒன்றைக் கூறுகின்றேன். நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து உலகின் மனச்சாட்சியை விழித்தெழ வைக்க உலக சமூகத்தின் மனதையும் அறிவையும் வொன்றெடுக்க பாடுபட வேண்டும். எமது சுயத்தை நிலை நிறுத்தி எமது உரிமையை நாமே வென் றெடுப்பதற்கான வாய்ப்பும் இதுவே.

எனது தாயக உறவுகளே இலங்கை அரசின் போலி முகத்தைக்கண்டு ஏமாந்து விடாதீர்கள். அதன் உண்மை முகம் கோரமானது என்பதை பல தடவை நீங்கள் உணர்ந்துள்ளீர்கள். உடலால் தொலைவில் இருந்தாலும் உணர்வால் உங்களுடனேயே நானும் இருக்கின்றேன். எம்மைக் களைப்படையச் செய்து சோர்வுறவைத்து எமது உரிமைகளை எம்மிடம் இருந்து பறித்துவிடலாம் என இலங்கை அரசு நினைக்கிறது. இலங்கை அரசின் இந்த எண்ணத்தை சிதறடித்து உறுதியுடன் இருந்து எமது உரிமைகளை நாமே மீட்டோம்.

கேளுங்கள் தரப்படும் தட்டுங்கள் திறக்கப்படும் என்றார்'யேசுபிரான் . நாமும் எமது உரிமைகளைக் கேட்போம். தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருப்போம். சுதந்திரத்தின் கதவு ஒரு நாள் எமக்காகத் திறக்கப்படும். எம் மக்களின் நல்வாழ்விற்கான கதவு ஒரு நாள் திறக்கப் பட்டே தீரும். நாங்கள் கேட் போம். எமது உரிமைகளைக் கேட்டுக் கொண்டே இருப்போம். உலகத்திடம், உலக மனச்சான்றின் முன் தொடர்ந்து கேட்போம்.

# திருமலைக்கு கொண்டு வரப்பட்ட காயமடைந்தோரில் 200க்கும் மேற்பட்டோருக்கு சத்திர சிகிச்சை

## தம்பலகாமம், கந்தளாய் வைத்தியசாலைகளிலும் அனுமதி

(கொழும்பு)

முல்லைத்தீவில் இடம்பெறும் மோதல்களால் காயமடைந்த நிலையில் திருகோணமலைக்கு கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட பொதுமக்களில் 200 இற்கும் மேற்பட்டோருக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இவர்களுள் பலரை இரு மணித்தியாலத்திற்கு அதிகமான நேரம் சத்திர சிகிச்சை கூடத்தில் வைத்திருக்க வேண்டி ஏற்பட்டதாகவும் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எல்.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

திருமலைக்கு கொண்டு வரப்பட்ட காயமடைந்தோரில் சுமார் நூறு பேர் மெதடிஸ்த கல்லூரியிலும் 50 பேர் தம்பலகாமம் வைத்தியாசலையிலும் 100 பேர் கந்தளாய் வைத்தியாசலையிலும் ஏனையோர் ஆதார வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர், இவர்களை உறவினர்கள் பார்வையிடுவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். திருமலை வைத்தியசேவை நிலவரம் குறித்து கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் மேலும் தெரிவிக்கையில்,

காயமடைந்து வந்தோரில் பலரது நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது. சிறுவர்களும் குழந்தைகளும் அதிகமாக உள்ளனர். பலர் அங்கவீனமடைந்துள்ளனர். சுமார் 200 இற்கு மேற்பட்டோருக்கு சத்திர சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இவர்களுள் பலரை 2 அல்லது 3 மணித்தியாலங்களுக்கு மேல் சத்திர சிகிச்சை கூடத்தில் வைத்திருக்க வேண்டி ஏற்பட்டது. மட்டக்களப்பு, சிலாபம், காலி, கம்பளை போன்ற இடங்களில் இருந்து விஷேட வைத்திய குழுக்கள் திருமலைக்கு அழைக்கப்பட்டுள்ளன. சில நோயாளிகள் கொழும்புக்கும் ஒரு சிலர் கண்டிக்கும் மாற்றப்பட்டுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட இடங்களுக்கு மேலதிகமாக திருமலையில் உள்ள சில பாடசாலைகளிலும் காயமடைந்தோரை அனுமதித்து சிகிச்சை அளிப்பது தொடர்பாக ஆராய்ந்து வருகிறோம் என்றார்.

இதேவேளை, புதுமாத்தளன் தற்காலிக வைத்தியசாலைக்கு தொடர்ந்தும் அதிகமான மக்கள் சிகிச்சைக்காக வருவதாகவும் அங்கு மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் செஞ்சிலுவைச் சங்கத்தின் பேச்சாளர் கூறினார்.

மோதல்களுக்குள் சிக்குண்டு காயமடைந்து முல்லைத்தீவு புதுமாத்தளன் தற்காலிக வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவந்த பொது மக்களுள் 368 பேரை முதற்கட்டமாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கடந்த 11 ஆம் திகதி கப்பல் மூலம் திருமலைக்கு கொண்டு வந்தது. இவர்களுள் இருவர் அனுமதிக்கப்படும் போதே உயிரிழந்திருந்ததாகவும் மேலும் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாகவும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், புதுமாத்தளனில் மீதமிருந்த நோயாளர்கள் உட்பட கடந்த 12 ஆம் திகதி சிகிச்சைக்காக வந்தவர்கள் உள்ளிட்ட 407 பேர் கப்பல் மூலம் திருமலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளனர். இவர்களுக்கான வைத்தியசேவைகளின் நிலவரம் தொடர்பாக வைத்தியசாலை பணிப்பாளர் அனுஷியா ராஷ்மோகன் மேலும் தெரிவிக்கையில்,

இரு தடவைகளிலும் கொண்டு வரப்பட்ட சுமார் 770 பேருக்கு திருமலையிலும் அதனை சூழவுள்ள இடங்களிலும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. திருமலை வைத்தியசாலையில் இடநெருக்கடி இல்லை என்று கூறுவதற்கில்லை. ஆயினும் காயமடைந்து மிகவும் பரிதாபமான நிலையில் கொண்டு வரப்படும் அப்பாவி மக்களுக்கு எப்படியாவது சிகிச்சை அளிக்க வேண்டுமென்ற திடசங்கற்பத்துடன் செயற்படுகின்றோம்.

முன்னர் கொண்டுவரப்பட்ட 368 பேருக்கு மேலதிகமாக வியாழன்று இரவு மேலும் 407 பேர் சிகிச்சைக்காக கொண்டுவரப்பட்டுள்ளனர். இன்னும் எதிர்காலத்திலும் நோயாளர்கள் அங்கிருந்து கொண்டுவரப்படலாம். எனவே முன்னேற்பாடாக திருமலை வைத்தியசாலைக்கு காயத்தின் தன்மை, மருத்துவ தேவை என்பவற்றைப் பொறுத்து திருமலை வைத்தியசாலையிலும் மெதடிஸ்த கல்லூரியிலும் வேறு சில இடங்களிலும் தரம்பிரித்து நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு மெதடிஸ்த கல்லூரியில் 85 இற்கும் மேற்பட்டோர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திருமலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்கள் சிலருக்கு சிறுகாயங்கள் ஏற்பட்டுள்ளபோதிலும் அநேகமானோர் மிக மோசமான காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான சுமார் 100 இற்கும் மேற்பட்டோர் (நேற்று முன்தினம் நண்பகல்வரை) சத்திர சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் ஆபத்தான நிலையில் இருந்த அறுவர் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

அதிகரிக்கும் தேவைக்கு ஏற்றவாறு மேலதிக மருத்துவர்களையும் மருந்துப் பொருட்களையும் பெற்றுக்கொள்வதற்கு வைத்தியசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது என்றார். அத்துடன் திருகோணமலையில் உள்ள பொதுமக்களுக்கு சிகிச்சை அளிக்க விஷேட வைத்திய குழுவொன்றையும் சத்திர சிகிச்சைக்கு தேவையான மருந்துப் பொருட்களையும் அனுப்பி வைக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்துடன் வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் நிலைகொண்டு செயற்படும் வகையிலான சுகாதார தொண்டர் படையணியை அமைக்கவும் அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இதேவேளை வன்னியில் தொடரும் யுத்தம் காரணமாக காயமடைந்தவர்களாக புதுமாத்தளன் தற்காலிக வைத்தியசாலைக்கு நேற்றுமுன் தினமும் பலர் சிகிச்சைக்காக வந்துள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பேச்சாளர் சுஸி விஜேரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், வியாழக்கிழமை வரை புதுமாத்தளன் வைத்தியசாலைக்கு வந்த அனைத்து நோயாளர்களும் திருமலைக்கு கொண்டுவரப்பட்டு விட்டனர். இருந்தும் காயமடைந்த நிலையில் தொடர்ந்தும் சிகிச்சைக்காக அதிகமான பொதுமக்கள் வருகின்றனர். அவர்களையும் அரச கட்டுப்பாட்டு பகுதிக்கு கொண்டு வர நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இது இப்படியிருக்க கடந்த 10 நாட்களுக்கு மேலாக முல்லைத்தீவுக்கு மருந்துப் பொருட்கள் கொண்டு வரப்படாமையினால் அவற்றிற்கு மாத்தளனில் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றார். (ஓ-6)

## மார்ச் முதலாம் திகதியில் இருந்து ஷெல் எரிவாயு விலை குறைக்கப்படலாம்

சமையல் எரிவாயுவின் விலையில் ஏற்படுத்தப்போகும் மாற்றங்கள் குறித்து ஷெல் நிறுவனம் அறிக்கையொன்றை அரசாங்கத்திடம் கையளித்துள்ளது. இந்த அறிக்கையின் படி மார்ச் மாதம் 1ஆம் திகதியில் இருந்து மேற்கொள்ளப்படவுள்ள சமையல் எரிவாயு கொள்கலன் விலை குறைப்பு தொடர்பான அறிக்கையொன்றினை நுகர்வோர் அதிகார சபைக்கு வழங்கியுள்ளதாக ஷெல் எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி பெரும்பாலும் சமையல் எரிவாயுவின் விலை குறைக்கப்படலாம் என ஷெல் எரிவாயு நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் றிமுசலீன் தெரிவித்துள்ளார்.

இறுதியாக சமையல் கொள்கலன் விலை குறைப்பு ஜனவரி மாதம் முதலாம் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந் நிறுவனத்தினால் நுகர்வோர் அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்த விலைச் சுட்டெண் தொடர்பில் அதிகார சபையின் குழுவினரால் பரிசீலிக்கப்பட்ட பின்னர் புதிய விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தன.

இதன் அடிப்படையில் கடந்த டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் உலக சந்தையில் நிலவிய எரிவாயு விலை மற்றும் கப்பல் கட்டணங்கள் என்பவற்றை கருத்தில் கொண்டு விலை குறைப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. (ஓ)

## சேவை நலன் பாராட்டு விழா

2007, 2008 ஆம் ஆண்டுகளில் நல்லூர் கோட்டப்பாடாசலைகளில் அதிபர்களாக கடமையாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கான சேவைநலன் பாாட்டுவிழாவும் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வும் இன்று மு.ப 10 மணிக்கு நல்லூர் சென்பெனடிக் றோ.க. வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பாராட்டி கௌரவிக்கப் படவுள்ளோர் விபரம் பின்வருமாறு,

இ.சிவபாதசேகரம் (கொக்குவில் இராமகிருஸ்ணா வித்தி), க.ப்ரமேஸ்வரன் (கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டிதவித்தி), த.சிவராசா (முத்துத்தம்பி மகாவித்தி), மு.செல்லையா (இளையதம்பி இந்து வித்தி, பொ.பத்ம நாதன் (கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தி (ஓ-2)

## பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி செவ்வாய்கிழமை காலை 10.00 மணிக்கு உதவி அரச அதிபர் பணிமனை ஒன்றுகூடல் மண்டபத்தில் உதவி அரச அதிபர் க. ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகள், விவசாய விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர்கள், தீவக வடபிராந்திய பஸ் சேவை உத்தியோகத்தர்கள், தனியார் சிற்றூர்தி சேவையாளர்கள் மற்றும் தனியார் வர்த்தக சங்க நிர்வாகிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஓ-72)

## ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ண போட்டி

ஜெயரட்ண சிங்கம் வெற்றிக் கிண்ணத் துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் கால் இறு திப் போட்டி இன்று காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதா னத்தில் யாழ்.பல்கலைக்கழக அணிக்கும் சுன்னாகம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் நடைபெற உள்ளது. இப்போட்டி 50 பந்து பரிமாற்றல்களை கொண்ட போட்டியாக நடைபெறும். (ஓ)

## வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த போது கைதுசெய்யப்பட்ட 33 பேர் புனர்வாழ்வு முகாம்களில்

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்தபோது சந்தேகத்தின் பேரில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட 35 பேரில் 33 பேர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டவர்களில் இருவர் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டதாக நீதிமன்றத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பப்பட்டவர் களில் இரண்டு பெண்களும் உள்ளடங்குகின்றனர். பெண்கள் இருவரும் அம்பேபுஸ்ஸ புனர்வாழ்வு முகாமுக்கும் ஏனைய அனைத்து ஆண்களும் பொலனறுவ வெலிகந்த புனர்வாழ்வு நிலையத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பப்பட்டவர்களின் பெயர் விபரங்கள்,

அரியரட்ணம் சிறீரங்கன் – பூநகரி, அருள்நாதன் ஆதவன் – பூநகரி, திருநாவுக்கரசு தர்ஷனா – பூநகரி, ஜேசுதாசன் அன்டன் றெஜினோல்ட் – சின்ன பண்டிவிரிச்சான் மடு, கணேஷலிங்கம் நிர்மலன் – கரிஞ்சிகுடியிருப்பு முல்லைத்தீவு, வாஞ்சி ஆனந்தன் சதீஸ்வரன் – சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம், பேரின்பநாயகம் செலுமைநாதன் – துச்சணா மருதமடு பாலம்பிட்டி, சிவராசா மதனரூபன் – கரியாலை நாகபடுவான் பல்லவராயன் கட்டு, முத்துலிங்கம் குணதீசன் – கட்ஷன் வீதி வட்டக்கச்சி கிளிநொச்சி, இராஜேந்திரன் கிருபாகரன் உடையார் கட்டு இருட்டுமடு முல்லைத்தீவு, ஜேசுதாசன் ஜெகராசா – கல்மடு படிவம் 1 வவுனியா, இரவீந்திரன் இஸ்டனிஸ்லாஸ் – வேலகுளம் அடம்பன், கணகரட்ணம் குகபிரசாந்த – பூநகரி, துரைராசா கணேசுதன் – 3 ஆம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம், யேசுரட்ணம் அன்டனி பிரபாகரன் – கொழும்பு 13, அன்டனி றெஜினோல்ட் – இருட்டுமடு உடையார் கட்டு முல்லைத்தீவு. ராஜரட்ணம் நந்த குமார் – கண்டாவளை கிளிநொச்சி, வசந்தரா செல்வம் கஜேந்திரன் – தருமபுரம் கிளிநொச்சி, குருநாசவன் தரதாஸ் நிரஞ்சன் – ஆணை விழுந்தான் கிளிநொச்சி, பஸ்தியான் அன்டனி – மடு, கனகபிரகாசம் செல்வராஜ் – தலை மன்னார் மன்னார், இராஜரட்ணம் ஜெயரூபன் – முரசு மோட்டை பரந்தன், இரட்ணசிங்கம் நிரோஷன் – பளை, பாஸ்கரன் சுபாஸ்கரன் – உடுவில் மேற்கு மானிப்பாய், சிற்றம்பலம் சிவகுருநாதன் கொடிகாமம், நடராஜா தேவகுமார் – உதயநகர் கிளிநொச்சி, இராசேந்திரம் மினின்ராஜ் – பல்லவராயன்கட்டு, காண்டியாசன் முகம் – யாழ்ப்பாணம், லோகநாதன் ஹரிகரன் – கட்டகாடு கிளிநொச்சி, அன்டனி சால்ஸ் – சின்னப்பண்டி விருச்சான் மடு, தர்மராசா கசரதன் – கனகபுரம் கிளிநொச்சி, பெஞ்ஜமின் போல்ராஜ் – உதயநகர் மேற்கு கிளிநொச்சி, முத்துக்குமார் சுரேந்திரன் – சின்ன பண்டிவிருச்சான் மடு, காந்தரூபன் மெரினா – வெற்றிலைக்கேணி முல்லைத்தீவு, ஜோசப் ஸ்டெலின் சுபா – உதயநகர் (ஓ-6)


## படையினரால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் 20 பொலிஸ் நிலையங்கள்

வடக்கில் படையினரால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக புதிய 20 பொலிஸ் நிலையங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வவுனியா ஓமந்தை சோதனைச்சாவடியிலிருந்து ஆனையிறவு வரையான பிரதேசங்களிலேயே இந்தப் புதிய பொலிஸ் நிலையங்களை அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்டத்திற்கு பொறுப் பான பிரதிப்பொலிஸ்மா அதிபர் நந்தன முனசிங்க தெரிவித்தார்.

இந்த 20 பொலிஸ் நிலையங்களையும் உள்ளடக்கும் வகையில் கிழக்கு வன்னி என்ற பெயரில் பிரதான பொலிஸ் தொழிற்பாட்டு பிரிவொன்றையும் அமைக்க தீர் மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மேற்படி பொலிஸ் தொழிற்பாட்டு பிரிவுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபராக தீபால் தல் பதாதுவை நியமிக்கவும் ஆலோசிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (ஓ-6)



Lifeline

# மீண்டும் வாழ்வோம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

## வவுனியா நோக்கி இடம்பெயரும் வன்னி மக்கள்

வன்னியில் நிலவி வரும் அசாதாரண சூழ்நிலைகளால் அங்கு மனிதாபிமான சூழ்நிலை மாறியவண்ணமே காணப்படுகிறது. அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க புதுக்குடியிருப்பிலிருந்த வைத்தியசாலை அங்கிருந்து நான்கு கிலோமீட்டர் தூரத்திலுள்ள புதுமாத்தளன் பிரதேசத்திற்கு மாற்றப்பட்டு அப்பகுதியில் இயங்கி வருகின்றது. அங்கு சிகிச்சை பெற்றுவரும் 300 நோயாளிகள் வவுனியாவிற்கு விரைவில் அழைத்துவரப்படுவார்கள் எனவும் காயமுற்ற மற்றும் நோய்வாய்ப்பட்ட மக்களை வன்னியிலிருந்து பாதுகாப்பாக அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அழைத்து வர முடியும் என தான் நம்புவதாகவும் ICRC ஊடகப் பேச்சாளர் சரசி விஜயரட்ன தெரிவித்தார்.

இதேவேளை, வன்னியிலுள்ள காயமடைந்த பொதுமக்களை வவுனியாவிற்கு அழைத்து வர அரசாங்கம் முயற்சிப்பதாகவும் அதற்காக குறிப்பிட்ட நேரத்திற்கு யுத்த நடவடிக்கைகள் நிறுத்தப்படும் எனவும் இராணுவப் பேச்சாளர் உதயநாணயக்கார குறிப்பிட்டார்.

கடந்த வாரம் ICRC மற்றும் UNஅமைப்புக்கள் காயப்பட்ட 167 பேரை வவுனியாவிற்கு அழைத்து வந்துள்ளனர். இந்நோயாளிகளுடன் வருகை தந்து உறவினர்கள் தற்போது நெலுக்குளம் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். வைத்தியசாலையில் சிகிச்சை பெறுபவர்களுடன் உறவினர்கள் தங்கியிருப்பதற்கு விஷேட அனுமதி தேவைப்படுவதாக வவுனியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தெரிவித்தார்.

வைத்திய பராமரிப்பு தேவைப்படுபவர்களின் பெயர்கள் வைத்திய அத்தியட்சகர் ஊடாக இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.

வைத்திய பராமரிப்புக்குத் தேவையானவர்களை இராணுவத்தினர் முகாமிலிருந்து அழைத்துவந்து வைத்தியசாலையில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றது எனவும் அவர் தெரிவித்தார்.



கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து கட்டுப்பாட்டு பகுதியை வந்தடைந்த மக்கள்

வவுனியாவிற்கு ஆயிரக்கணக்கில் மக்கள் இடம்பெயர்வர் என்ற நம்பிக்கையுடன் அரசாங்கம் பல கட்டமைப்புக்களை மேற்கொள்கின்றது.

இதன் ஓர் அங்கமாக மெனிக் பாமில் 300 ஏக்கர் நிலப்பரப்பில் 8 ஆயிரம் வீடுகளும் மன்னார் பிரதேசத்தில் கட்டையடம்பன் பகுதியில் மாதிரிக் கிராமங்களும் அமைக்கப்படவுள்ளன.

இது தொடர்பில் மீள்குடியேற்ற அமைச்சர் ரிஷாட் பதியுதினைத் தொடர்பு கொண்டு கேட்ட போது மக்கள் அவர்களது சொந்த மண்ணுக்கு, மிதி வெடி கள் அகற்றப்பட்டு போகும் வரை சகல வசதிகளும் அந்த மாதிரிக் கிராமத்தில் செய்து கொடுக்கப்படும் என தெரிவித் தார்.

வன்னியிலிருந்து மக்கள் அதிகமாக இடம்பெயர்ந்து வருவதனால் வவுனியா அரசாங்க அதிபர் பாம்பமடு பல்கலைக்கழகத்தின் பதிவாளரிடம் பல்கலைக்கழகத்திகான இரண்டு விடுதிகளைக்கையளிக்குமாறு கோரியுள் ளார்.

UNHCR மற்றும் ICRC அமைப்புகளுக்கு மாத்திரமே வவுனியா மற்றும் மன்னாரிலுள்ள புதிய முகாம்களில் சேவையாற்ற அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது.

ஆனால் யாழ்ப்பாணத்திலுள்ள முகாம்களில் அனைத்து நிறுவனங்களும் சேவையாற்ற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

வன்னி மக்களுக்காக இந்திய அரசாங்கம் மருந்துகளையும் கனேடிய அபிவிருத்தி நிறுவனம் நிதியுதவிகளையும் வழங்கி வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**உங்கள்எண்ணங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்**

மீண்டும் வாழ்வோம்
தொடர்பான உங்கள்
மேலான எண்ணங்களையும்
படைப்புக்களையும் எதிர்பார்க்கிறோம்
நீங்கள் ஓவியம் வரையும் ஆற்றல் மிக்கவர் எனில்
உங்கள் அனுபவங்களை சித்தரிக்கும் ஓவியங்களை
வரைந்து எமக்கு அனுப்பி வையுங்கள்
அவற்றை மீண்டும் வாழ்வோம்
பகுதியில் பிரசுரிக்க காத்திருக்கிறோம்.

த.பெ.இல.1039 கொழும்பு
தொ.பே. -0774952242
மின்னஞ்சல்-info@lifeline srilanka.com

## உங்கள் கதைகள்

மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் இடம்பெறக் காத்திருக்கின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஒலிபரப்பாகும் நாடகங்களின் தொகுப்பை மீண்டும் வாழ்வோம் பத்திரிகை வாயிலாகவும் உங்களுக்கு அறியத்தருகின்றோம். வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இருந்து பல்வேறு காரணங்களால் இடம் பெயர்ந்து முகாம்களில் வாழும் சிறுவர்களின் மனநிலை குறித்து எடுத்துக்கூறும் வகையில் 'அகதியின் அகமுகம்' குறு நாடகம் அமைந்தது. குறுநாடகத்தின் தொகுப்பு கீழே தரப்படுகின்றது.

## அகதியின் அகமுகம்

மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்ச்சியின் உங்கள் கதைகள் பகுதியில் சிறுவர்கள் தொடர்பிலான விடயங்களை மையப்படுத்தி பல குறு நாடகங்களை வழங்கியிருக்கிறோம். கடந்த வார நிகழ்ச்சியில் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழும் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்கள் இழந்து கொண்டிருக்கும் உரிமைகள் தொடர்பாக அகதியின் அகமுகம் என்ற நாடகம் ஒலிபரப்பானது. இந்த நாடகத்தில் அகதிச் சிறுவர்கள் பற்றி கூறியிருந்தோம்.



இடம்பெயர்வுகளினாலும் அகதி வாழ்க்கையினாலும் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் சிறுவர்கள் தான். உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் எளிதில் பாதிப்படையக் கூடியவர்கள் சிறுவர்கள். உலகளாவிய ரீதியில் நோக்கும் போது யுத்த சூழ்நிலைகள் காரணமாக ஆயிரக்கணக்கான சிறுவர்கள் அங்கவீனர்களாகவும் மன நோயாளிகளாகவும் காணப்படுகிறார்கள். இந்த நாடகத்தில் வரும் சின்னவன் என்ற சிறுவன் தாய் தந்தை உறவுகளை இழந்து சொந்த இடத்தை விட்டு ஒவ்வொரு இடமாக இடம் பெயர்ந்து இறுதியாக ஒரு அகதி முகாமில் தனது சிறிய தாயுடன் வாழ்கிறான். குடும்பத்தின் இழப்பு அவனை பலமாக பாதித்துள்ளது. மற்றவர்களிடம் இருந்து தன்னை தனிமைப்படுத்திக் கொண்டு இருக்கிறான். இடம்பெயர்வு, அகதி முகாம் வாழ்க்கை அவனுக்கு புதிய விடய மாகத் தெரிகிறது. அந்த சூழலுடன் இணைந்து வாழ முடியாமல் தவிக்கிறான்.

அகதி முகாம், நலன்புரி நிலையம் இவ்வாறான இடங்களில் வாழும் சிறுவர்கள் வெவ்வேறான மனோநிலையில் காணப்படுகிறார்கள். சிலர் இந்த சூழ்நிலைக்குள் தம்மை பழக்கப்படுத்திக் கொண்டு வாழ்கிறார்கள். இங்கு வாழும் சிறுவர்கள் பெரும் பாலும் கல்வி கற்கும் உரிமையை இழக்கிறார்கள். பாடசாலைகளில் இவர்களை அகதி முகாம் பிள்ளைகள் என்ற போர்வையில் தான் பார்க்கிறார்கள். வீட்டில் வளரும் ஒரு சிறுவனின் பழக்கவழக்கத்திற்கும் அகதி முகாமில் வளரும் ஒரு சிறுவனின் பழக்கவழக்கத்திற்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

இங்கு வாழும் சிறுவர்கள் தவறான வழிகளை தேர்ந்தெடுப்பதற்கு வாய்ப்புக்கள் அதிகமாகவே காணப்படுகின்றன. இங்கு பெற்றோர்கள் பிள்ளைகளை அதிகமாக கட்டுப்படுத்த முடியாது. இந்த விடயத்தில் பூரணமாக சிறுவர்கள் மேல் பிழை கூற முடியாது. காரணம் அவர்கள் வாழும் சூழல். கட்டுப்பாடு இல்லாத ஒரு வாழ்க்கை முறை. இங்கு வாழும் சிறுவர்களை எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் பேறுபடுத்திப் பார்க்கக்கூடாது.

அவர்களுக்கும் இந்த சமுதாயத்தில் வாழ்வதற்கு எல்லா உரிமைகளும் உண்டு. அகதிச் சிறுவர்கள் விடயத்தில் அக்கறை காட்ட வேண்டியவர்களின் எண்ணிக்கை அதிகமாகவே காணப்படுகிறது. பெற்றோர், அயலவர்கள், பாடசாலை ஆசிரியர்கள், சமூகம், தொண்டு நிறுவனங்கள், அரசாங்கம் சர்வதேசம் என அனைவருமே அகதிச் சிறுவர்கள் மேல் அக்கறை காட்ட கடப்பாடு உள்ளவர்கள். எமது நாடகத்தின் மூலம் நாம் வலியுறுத்துவதும் இந்த விடயம் பற்றித்தான்.

## பெண்களுக்கெதிரான வன்முறைகளை இல்லாது ஒழிக்கும் பிரச்சாரம்

பெண்களுக்கெதிரான வன்முறைகள், மிக அதிகளவில் சமூகத்தில் பரந்து காணப்படுகின்றன. இவை சாதாரணமாக ஏற்றுக் கொள்ளப்பட்டவையாகவும், பெரும்பாலானவர்கள் இவைபற்றி கதைப்பதையோ அல்லது பாதிக்கப்பட்டவருக்கான நிவாரணத்தை தேடிக்கொடுப்பதிலோ குறைவான ஆர்வத்தையே காட்டுகின்றனர். இருப்பினும் இவை மனித உரிமை மீறல்களாக ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடணப்படுத்தப்பட்டதுடன், இலங்கையும் அனை ஏற்றுக்கொண்டுள்ளது.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் சாதரண வேளைகளில் மிகப் பரந்தளவில் காணப்படுகின்றது. இவை இடம்பெயர்ந்தவர்கள் வாழும் இடங்களிலும், மிக அதிகளவில் காணப்படுகின்றன.

குறுகிய வாழ்விடம், பல்வேறு வகையான மன அழுத்தங்கள், பயம் போன்றவையும் வன்முறைகள் அதிகரிப்பதற்கு காரணமாக அமைகின்றன. இவை உடல், உள, பொருளாதார மற்றும் சமூக வாழ்வியல் பாதிப்புக்களை உருவாக்குகின்றன. இவை மிக அதிகளவில் பெண்கள் மீதும், சிறுவர்கள் மீதும் வெளிப்படுத்தப்படுகின்றன. அதுமட்டுமல்லாது பாலியல் சேஷ்டைகள், பாலியல் துன்புறுத்தல்கள் மற்றும் பாலியல் வல்லுறவுகளும் இங்கு இடம் பெறுவதற்கான சாத்தியக் கூறுகள் மிக அகதிகளவில் காணப்படுகின்றன.

### எங்களால் முடியும்

ஆண்களாலும் அடுத்தவரை மதிக்கமுடியும் இது தொடர்பாக பேசவும் முடியும். பெண்களுக்கெதிரான வன்முறைகளை இல்லாது ஒழிக்க ஆண்களின் பங்களிப்பு இதில் மிக முக்கியமாகிறது. உங்கள் தாயினதோ, மனைவியினதோ அல்லது சகோதரிகள் மற்றும் குழந்தைகளின் மன அழுத்தத்தைக் குறைப்பதற்கான வழிமுறைகளை மேற்கொள்ள முடியும். அத்தோடு மது பாவனையை விடுவதன் மூலமும் வீட்டில் மனைவியையோ, சகோதரியையோ அன்றி மகளையோ அடிப்பதை மற்றும் வார்த்தைகளால் துன்பப்படுத்துவதை நிறுத்த முடியும். அதேவேளை நீங்கள் ஏனைய ஆண்களுடன் இது தொடர்பாகவும் இவை எவ்வாறான தீங்கை ஏற்படுத்துகின்றன என்பது தொடர்பாகவும் கலந்துரையாட முடியும்.

பெண்களின் பங்கும் இதில் மிக முக்கியமானது. ஒவ்வொரு பெண்களும் ஏனையவர்களுடைய பிரச்சினைக்கு காது கொடுப்பதுடன் ஏனையவர்களுடன் இணைந்து செயற்படவும் முடியும். நீங்கள் தனியாக இருப்பதை விடவும் சேர்ந்து இருப்பது உங்களுக்கான வலுவைக் கூட்டும். அத்துடன் நீங்களாகவே இவ்வாறான நிகழ்வுகள் தொடர்பாக உங்களுக்குள் சிறு குழுக்களாக கதைக்கவும் முடியும். இவை தொடர்பாக பல்வேறுபட்ட நிறுவனங்கள் உங்களுக்கு உதவி புரியக்கூடியவர்களாக இருப்பார்கள். இதற்கான சட்டங்கள், உளவள ஆலோசனை மையங்கள் மற்றும் காவல்துறை உதவிகளும் வழங்கப்படும்.

முகாம்களில் கடமையாற்றும் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள் இது தொடர்பாக அறிந்துள்ளனர். நீங்கள் இவை தொடர்பாக அவர்களிடம் ஆலோசனை கேட்க முடியும். அன்றில் இது தொடர்பான வேலைகளில் ஈடுபடும் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களிடமும் அவர்கள் உங்களை மேலதிக உதவிக்காக அனுப்ப முடியும்.

**மீண்டும் வாழ்வோம்**

''மீண்டும் வாழ்வோம்''
திட்டமானது இலங்கையின்
அசாதாரண
சூழ்நிலைகளினால்
இடம்பெயர்ந்து முகாம்
களில் வாழும் மக்களுக்
காகவும் மீள்குடியேறி
உள்ள வர்களுக்காகவும்
தகவல்களை வழங்கும்
பரந்து பட்ட மனி தாபிமான
செயற்றிட்ட அமைப்
புக்களின் ஓர் அங்கமாகும்.



மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியானது சூரியன் எவ்.எம். வானொலியூடாக சனிக்கிழமை களில் காலை 6 மணிமுதல் 8 மணி வரையும் கிழக்கு மாகாணத்தில் பிறை எவ்.எம். வானொலியூடாக (F.M. 102 Mhz) ஞாயிற்றுக்கிழமைகளில் பி.ப. 1.30 மணி முதல் 2 மணி வரையும் புத்தளப் பிரதேசத்தின் அநூர் எவ்.எம் ஊடாக ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை 6.45 முதல் 7.15 மணி வரையும் எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை (WWW.Internews. lk.Radio. Voices of peace.lk) என்ற இணையத்தளத்திலும் கேட்கலாம்.

நெல் முற்ற முற்ற தலை சாய்க்கிறது. தலை சாய்க்க மறுக்கிற தென்னை அடியோடு சாய்கிறது.

– சி.என்.அண்ணாத்துரை

வலம்புரி

## ஐ.நாவின் இயலாமையை வெளிப்படுத்திய முருகதாசனின் தீக்குளிப்பு

ஜெனீவாவிலுள்ள ஐ.நா. சபைக்கு முன்பாக முருகதாசன் என்ற தமிழ் இளைஞன் தீக்குளித்து தியாகம் செய்தான்.

ஈழத்தமிழர் படும் துயர் கண்டு பொறுக்காத அந்த இளைஞன் தன் உடலை தீயில் வேக வைத்தமை தமிழ் உள்ளங்களை வேக வைக்கிறது.

இலண்டனில் வசித்த அந்த இளைஞன் விரும்பியிருப்பானாயின் சுகபோக வாழ்க்கையை அவன் வாழ்ந்திருக்க முடியும்.

ஆனால் வன்னியில் தமிழ் உறவுகள் படும் பெருந்துயர் கண்டு அவனால் பொறுக்க முடியவில்லை.

அதனால் ஐ.நா.சபைக்கு முன்னால் அவன் தன் உடலை எரியூட்டிக் கொண்டான்.

ஐ.நா. சபைக்கு முன்பாக சகோதரன் முருகதாசன் தீக்குளித்தமையானது ஐ.நா. சபை தேவையற்ற அமைப்பு என்பதற்கான முதலாவது எச்சரிக்கையாகும்.

உலக மகா யுத்தத்தைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட ஐ.நா. சபை ஈழத்தமிழர் விடயத்தில் துரோகமிழைத்துவிட்டது.

வன்னியில் துயர்படும் தமிழ் மக்களைக் காக்க அந்த அமைப்பு தவறிவிட்டது. சுருங்கக் கூறின் உலக நாடுகளின் தலைவர்கள் ஒன்று கூடி உண்டு மகிழ்ந்து கொள்வதற்கான அமைப்பாகவே ஐ.நா. சபை உள்ளது.

யுத்தத்தை தடுப்பது; பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவது என்ற நியமங்களுடன் ஐ.நா. சபை இயங்குவதாக இருந்தால் வன்னியில் அப்பாவித் தமிழ் மக்களை காப்பாற்றும் பொறுப்பை ஐ.நா.சபை ஏற்றிருக்க வேண்டும்.

ஆக, சகோதரன் முருகதாசன் ஐ.நா. சபையின் தலைமைக்காரியாலயத்திற்கு முன்பாக தீக்குளித்ததன் மூலம் ஐ.நா.சபை ஒரு செயலற்ற அமைப்பு என்பது நிரூபணமாகியுள்ளது.

அதேநேரம் ஈழத்தமிழர்கள் படும் துயர் கண்டு உலகுவாழ் தமிழர்கள் தீக்குளித்து தங்கள் இன்னுயிரை தியாகம் செய்கிறார்கள் என்ற செய்தியை அறிய, உலக நாடுகள் தமிழ் இனத்தின் இனப்பற்று, சகோதர பாசம் எத்துணை உயர்வானது என்பதை ஒருகணம் சிந்திக்க வேண்டும்.

இத்தகையதோர் தியாகம் உலகத்தில் வேறெங்காவது நடந்ததுண்டா என்பதையும் சீர் தூக்கி ஆராய்வது நல்லது.

அதேநேரம் இலங்கை அரசும் ஓர் உண்மையை புரிந்து கொள்ள வேண்டும். அதாவது தற்போதைய யுத்தம் அரசுக்கு வெற்றி தருகின்றதென்பதற்காக அந்த வெற்றி நிலைத்த –நீடித்த வெற்றி என்ற முடிவுக்கு வரலாகாது.

இலங்கை என்ற இந்த நாட்டில் என்று எல்லா இன மக்களும் ஒற்றுமையாக வாழ்கிறார்களோ அன்றுதான் இலங்கைக்கு வெற்றி கிடைக்கும்.

இந்த உண்மையை உணரத் தவறும்போது இலங்கைக்கு எதிரான போக்கு உலகில் வாழ் தமிழர்களிடமும் ஏற்பட வாய்ப்பு உண்டு என்பதையே முருகதாசனின் தீக்குளிப்பு உணர்த்துகிறதென்னும் உண்மையை இலங்கை அரசு உணர்வது அவசியம்.

# 'யாழ். வசந்த எழுச்சி விழா' விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு 'யாழ். வசந்த எழுச்சி விழா'மாபெரும் விளையாட்டுப் போட்டிகள் இம் மாதம் 15ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமாகின்றது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வடமாகாணத்திற்கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனையின்பேரில் 'தேக சத்தியை வளர்ப்போம்; தேச சத்தியாய் எழுவோம்'எனும் எண்ணக் கருவுக்கமைய ஆரம்பிக்கப்படவுள்ள இம்மாபெரும் விளையாட்டுப் போட்டிகள் இன்று ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் சித்திரை மாதம் 14ஆம் திகதி முடிபடையும்.

இதன்போது மாட்டு வண்டியோட்டம்,மரதன்,கால்பந்து, கரப்பந்து,தாச்சி,தலையணை மோதல்,கிறீஸ் மரம் ஏறுதல், வலைப்பந்து,ஹொக்கி, கிரிக்கெட்,சைக்கிளோட்டம்,யானைக்கு கண்வைத்தல் உட்பட பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் இடம் பெறவுள்ளன.

யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தை இராணுவ தரப்பினர் மீள ஒப்படைத்துள்ள நிலையில் இப் போட்டிகளை அங்கு நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி விளையாட்டுப் போட்டிகளில் யாழ். குடாநாட்டிலுள்ள அனைத்து விளையாட்டு வீரர்களும்,வீராங்கனைகளும் பங்குபற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விளையாட்டுப் போட்டிகளை நடத்து வதற்கு வசதியாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 2 இலட்சம் ரூபா நிதியுதவியை வழங்கியுள்ளார்.

மேற்படி விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகும் யாழ். துரையப்பா மைதானத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

(சி)

## வீதிப் போக்குவரத்து கருத்தரங்கும் செயலமர்வும்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் மானிப்பாய் சென்ற் ஆன்ற்ஸ் றோ.க.த.கலவன் பாடசாலையின் மாணவர்களுக்கு வீதிப் போக்குவரத்து சம்பந்தமான கருத்தரங்கும், செயலமர்வும் 18 ஆம் திகதி புதன் கிழமை காலை நடைபெறவுள்ளதாக தலைவர் லயன் டாக்டர் ஆர் .சாந்தன் தெரிவித்துள்ளார். (ஓ-6)

## யாழ்ப்பாணத்தில் மருத்துவ கிராமம் திறக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மருத்துவக் கிராமம் ஒன்றினை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பண்ணைப் பிரதேசத்தில் அமைக்கப் பட்டுவரும் இந்த மருத்துவக் கிராமத்தை கொழும்பிலுள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைத்துள்ளார்.

இக்கிராமத்தினை நிர்மானிப்பதற்காக ஐக்கிய நாடுகள் திடடப்பிரிவின் உலக சுகாதார அமைப்பு மற்றும் அமெரிக்க மருத்துவக் கழகம் என்பன இணைந்து உதவியுள்ளன.

அனர்த்தம் காரணமாக காயமடையும் மக்களிற்கு அவசர சிகிச்சை அளிப்பதற்கு ஏற்றவகையில் இந்த மருத்துவக் கிராமம் அமையுமென தெரிவிக்கப்படுகிறது.

(ஓ-14)

## வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை புனரமைப்பு

(வல்வெட்டித்துறை)

வடமராட்சி வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது. அவுஸ்திரேலிய செஞ்சிலுவைச்சங்க நிதியுதவியுடன் இவ் வைத்தியசாலை புனரமைக்கப்பட்டு வருவதாக இவ் வைத்தியசாலையின் தலைமை மருத்துவர் தெரிவித்துள்ளார்.

இப் புனரமைப் பணிகளுக்காக 3 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஓ-14)

## இவ்வருட இறுதிக்குள் ஆயிரம் தாதியர்களை வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்க திட்டம்

(கொழும்பு)

இவ்வருட இறுதிக்குள் ஆயிரம் தாதியர்களை வெளிநாட்டிற்கு அனுப்பிவைக்கப் போவதாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா தெரிவிதுள்ளார்.

ஓமானிற்கான வேலைவாய்ப்பைப் பெற்றுச் செல்லும் 30 சுகாதாரத் தாதியர்களிற்கான நியமனக் கடிதங்களை வழங்கி வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சுகாதார சேவையாளர்கள் வெளிநாடுகளிற்குச் செல்வது குறித்து புதிய குடிவரவு குடியகல்வு நடைமுறைகள் திட்டமிடப் பட்டு வருவதாக தெரிவித்த அவர், இலங்கையில் தற்போது 3 தாதியர் பயிற்சி பாடசாலைகள் தொழிற்படுவதாகவும் எதிர் காலத்தில் பயிற்றப்பட்ட தாதியர்களின் எண்ணிக்கையை கணிசமான அளவு அதிகரிக்க முடியும் எனவும் இதன் மூலம் அவர்களிற்கு வெளிநாடுகளில் கடமையாற்ற சந்தர்ப்பம் வழங்கி அன்னியச் செலாவணியை ஈட்ட முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் மூலம் ஆயிரம் தாதியர்களை இவ்வருட இறுதிக்குள் வெளிநாட்டிற்கு அனுப்ப முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

(ஓ-14)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சுக வாழ்வுக்கான பயணம் நிறுவனத்தினால் நடாத்தப் பட்ட தாதியர்களுக்கான சுகாதர மருத்துவ பயிற்சி நெறியை பூர்த்தி செய்தோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று மு.ப11.00 மணிக்கு ஆடிய பாதம் வீதி திருநெல்வேலியில் அமைந்துள்ள சுகவாழ்வுக்கான பயணம் நிறுவனத்தில் நிறுவனத்தின் தலைவர் ஜி. நக்கீரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பி.பாலசுந்தரம் [illegible], கௌரவ விருந்திராக யாழ். வைத்தியசாலை பதில் பணிப்பாளர் கே. ராஜசேகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ஓ-2)

# ஊனம் உடலிலா? உள்ளத்திலா?

மனிதனின் உடலில் ஏற்படும் ஊனங்கள், கால் இழப்பு, கையிழப்பு, பார்வை இழப்பு, செவிஇழப்பு, இவைகளுக்குக் காரணம் இயற்கையின் கோளாறே ஆகும். இவைகளுக்கு மருந்து உண்டு. நவீன மருத்துவ முறைகள் வந்துவிட்டன. மேற்கண்ட ஊனங்கள் தற்காலிக துன்பத்தைத் தரும். முற்றிலுமாக இத் துன்பத்தை போக்கி விட முடியும்.

ஆனால் முற்றிலுமாக குணப்படுத்த முடியாத ஒரு


## பரமபிதா காட்டிய பாதை

மனிதனின் உள்ளத்தின் ஆழத்தில் ஏற்படுகின்ற காயங்களுக்கு , புண்களுக்கு, ஊனங்களுக்கு யார் காரணம்? இயற்கையா? அல்லது அந்த இயற்கையை அழகு ஓவியமாக படைத்து நமக்கு இலவச பரிசாக கொடுத்தானே அந்த இறைவனா?

மனித உள்ளங்களில் ஏற்படுகின்ற காயங்களுக்கு, வடுக்களுக்கு, மனிதனும், அவன் வாழகின்ற இந்த சமூகமும் தான் காரணிகள். இவைகளுக்கு மருந்து உண்டா என்றால் உண்டு. ஆனால் இவை மனிதர்களால் மட்டும் தான் முடியும்.

இதைத்தான் இன்றைய நற்செய்தி வாசத்தில் தெளிவாகப் பார்கிறோம்.

ஒரு மனிதனுடைய உடல் நோயை விட உள்ள நோய், ஒரு மனிதனுடைய உடல் ஊனத்தை விட உள்ள ஊனமே மிகப் பெரிய துன்பம். அந்த உள்ள ஊனத்தை ஏற்படுத்திய மனிதர்களும், சமூகமுமே அதை மீண்டும் ஆற்றிட வேண்டும்.



ஊனங்கள் மனித உடலில் அல்ல, மாறாக, மனித உள்ளத்தில் தான் என்பதை உணர்வோம். உடல் ஊனத்தை விட, உள்ள ஊனமே ஆறாத காயங்களை ஏற்படுத்தும் என்பதை உணர்வோம். எனவே ஊனங்களை ஏற்படுத்தும் வீணர்களாக இல்லாமல் ஊனங்களைக் குணப்படுத்தும் செயல் வீரர்களாக வாழ்வோம்.

ஜோன் ரொபேர்ட்.

# ஆட்கடத்தல் நடவடிக்கைகளில் முக்கிய வகிபாகம் வகிக்கும் பெண்கள்

## ஐ.நா.அதிர்ச்சித் தகவல்

(வியன்னா)

உலகெங்கும் நடைபெறும் ஆட்கடத்தல் நடவடிக்கைகளில் பெண்கள் முக்கிய வகிபாகம் வகிப்பது கண்டறியப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவிக்கின்றது.

வியாழக்கிழமை ஆட்கடத்தல் தொடர்பில் வெளியிடப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது உலகளாவிய அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆட்கடத்தல் நடைபெறும் 30 சதவீதமான நாடுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் ஆட்கடத்தல் நடவடிக்கையில் ஆச்சரியப்படத்தக்க வகையில் பெண்கள் பெருமளவு வகிபாகத்தை கொண்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக போதைப்பொருள் மற்றும் குற்றச் செயல் தொடர்பிலான ஐக்கிய நாடுகள் அலுவலகம் கூறுகிறது.

ஏனைய குற்றச்செயல்களை விட கடத்தல் நடவடிக்கையில் பெண்கள் முக்கிய வகிபாகத்தை வகிக்கின்றனர்.

ஏற்கனவே ஆட்கடத்தலுக்கு உட்பட்ட பெண்கள் பலரே இவ்வாறு கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். கிழக்கு ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியாவில் ஆட்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களில் 60 சதவீதமானவர்கள் பெண்களாவர் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆட்கடத்தலுக்கு உட்படுபவர்களில் சுமார் 20 சதவீதமானவர்கள் சிறுவர்களாவர்.

155 நாடுகளிலிருந்து பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்படி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# இஸ்ரேல் பாராளுமன்ற தேர்தலில் பெண் தலைவர் லிவினி வெற்றி

(ஜெருசலேம்)



இஸ்ரேல் பாராளுமன்ற தேர்தலில் இப்போது வெளிநாட்டு மந்திரியாக இருக்கும் ட்சிபி லிவினியின் கடிமா கட்சி 28 இடங்களில் வெற்றி பெற்றது. லிவினி பெண் தலைவர் ஆவார். முன்னாள் பிரதமர் நேதான் யாகுவின் வலது சாரியான லிகுட் கட்சி 27 இடங்களில் வெற்றி பெற்றது.

120 உறுப்பினர்கள் கொண்ட பாராளுமன்றத்தில் எஞ்சி உள்ள 65 இடங்களை 10 சிறிய கட்சிகள் பகிர்ந்து கொண்டு உள்ளன. இராணுவ மந்திரி எகுட் பராக் தலைமையிலான தொழிலாளர் கட்சி 13 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. ஒரு காலத்தில் இந்தக் கட்சி தான் இஸ்ரேலின் மிகப் பெரிய கட்சியாக இருந்தது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் லிவினியும் நேதான்யாகுவும் பிரதமர் பதவிக்கு போட்டிப்போடுகிறார்கள். இதற்கிடையில் லிவினி தன் தலைமயில் அமைய இருக்கும் தேசிய அரசாங்கத்தில் சேரவரும் படி நேதான் யாகுவுக்கு அழைப்பு விடுத்தார். இதை நேதான்யாகு ஏற்க மறுத்துவிட்டார். பிரதமராக வரவேண்டும் என்று விரும்புவதாக அவர் தெரிவித்தார். (ஓ-6)

# அரை மணி நேரம் லிப்ட்டில் சிக்கித் தவித்த மலேசியப் பிரதமர்

(கோலாலம்பூர்)

மலேசியப் பிரதமர் அப்துல்லா படாவி அரை மணி நேரம் லிப்ட்டில் சிக்கித் தவித்த விவரம் தெரியவந்துள்ளது.



இது குறித்து உள்ளூர் பத்திரிகைகளில் வெளியான செய்தியில்,

'கோலாலம்பூரில் உள்ள புத்ரஜயா சர்வதேச மாநாட்டு மையத்தில் பொது சேவைத் துறையின் நிகழ்ச்சி ஒன்று வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் பங்கேற்பதற்காக பிரதமர் அப்துல்லா படாவி மற்றும் முக்கியப் பிரமுகர்கள் அந்த மையத்துக்கு வந்தனர்.

நிகழ்ச்சி நடந்த அரங்கத்திற்குச் செல்வதற்காக பிரதமர் உட்பட அனைவரும் லிப்ட் மூலம் புறப்பட்டனர். அந்த அரங்கம் உள்ள தளத்தில் லிப்ட் நிறுத்தப்பட்டது.

அவர்கள் வெளியேறுவதற்காக கதவைத் திறக்க முயன்றபோது முடியவில்லை. கதவுகள் சிக்கிக் கொண்டிருந்தன.

உடனே தீ யணைப்புப் படையினர் மற்றும் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் விரைந்து வந்து லிப்ட் கதவைத் திறக்க முயன்றனர்.

பல வழிகளைக் கையாண்டும் அவர்களது முயற்சி பலனளிக்கவில்லை.

இதையடுத்து சிறப்பு நடவடிக்கைக் குழுவினர் வரவழைக்கப்பட்டனர். அவர்களும் பலவாறு முயன்றனர். அது முடியாமல் போகவே கடப்பாறையால் லிப்ட் கதவை உடைத்துத் திறந்தனர்.

பின்னர் பிரதமர் உட்பட அனைவரும் லிப்ட்டிலிருந்து பத்திரமாக வெளியேற்றப்பட்டனர்.

கதவைத் திறக்க முயன்ற நடவடிக்கைகள் சுமார் அரை மணி நேரம் வரை நீடித்ததால் அதுவரை பிரதமர் உட்பட அனைவரும் லிப்ட்டில் சிக்கித் தவிக்க நேர்ந்தது என்று செய்தியில் கூறப்பட்டுள்ளது. (ஓ-6)

## உலக தரிசனம்

# தென் ஆபிரிக்க தேர்தல் ஏப்ரல் 22ஆம் திகதி

தென் ஆபிரிக்கத் தேர்தலானது எதிர்வரும் ஏப்ரல் 22ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அந்நாட்டு ஜனாதிபதி ககலெமா மொத்லன்தே அறிவித்துள்ளார்.

இத்தேர்தலில் ஆளும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி வெற்றி பெறும் என பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் அக்கட்சி மக்கள் காங்கிரஸ் கட்சியிடமிருந்து சவாலை எதிர்கொண்டுள்ளதாக கூறப்படுகிறது. (ஓ-6)

# தலிபான் தீவிரவாதிகளால் பாகிஸ்தானிற்கு அச்சுறுத்தல்

## சர்தாரி தெரிவிப்பு

(இஸ்லாமாபாத்)



தலிபான் தீவிரவாதிகளால் பாகிஸ்தானிற்கு பெரும் அச்சுறுத்தல் உள்ளதாக அதிபர் சர்தாரி கூறியுள்ளார்.

அவர் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பெஷாவர் உட்பட பல பழங்குடியினர் பகுதிகளில் தலிபான் தீவிரவாதிகளுக்கு கிராம மக்கள் ஆதரவாக உள்ளனர். அவர்கள் பாகிஸ்தான் முழுவதும் பெருமளவில் ஊடுருவியுள்ளனர். இதனால் தலிபான் தீவிரவாதிகளால் பாகிஸ்தானிற்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

தீவிரவாதத்திற்கு எனது மனைவியை பறிகொடுத்துள்ளேன்.

அமெரிக்காவுக்காக நாங்கள் தலிபான் மற்றும் அல்கொய்தாவுக்கு எதிராக போரிடவில்லை. எங்களுக்காகத் தான் போராடி வருகிறோம் என்றார் சர்தாரி. (ஓ-6)

# பாகிஸ்தானிலிருந்து அல்கொய்தாவை ஒழித்துக்கட்டினால் மட்டுமே வெற்றி

## அமெ.அதிகாரி தெரிவிப்பு

(வோஷிங்டன்)

பாகிஸ்தானின் பழங்குடியின மக்கள் பகுதியில் இருந்து அல்கொய்தா தீவிரவாதிகளை ஒழித்துக்கட்டினால் மட்டுமே தீவிரவாதத்திற்கு எதிரான போரில் வெற்றி கிடைக்கும் என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தத் தகவலை தேசிய உளவுத்துறை இயக்குனர் டென்னிஸ் பிளேர் ஃசெனற் குழுவிடம் தாக்கல் செய்த அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

பாகிஸ்தானின் பழங்குடியின மக்கள் பகுதியில் இருந்து அல்கொய்தாவினரை வெளியேற்றினால் அவர்கள் ஆப்கானிஸ்தானில் சண்டையிட்டு வரும் தலிபான் தீவிரவாதிகளுக்கு ஆதரவு அளிப்பது கடினமாகிவிடும் என்றும் அவர் தெரிவித்தார். (ஓ-6)



குடும்பத்தினருடன் விடுமுறையைக் கழிக்கச் செல்லும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா

# கனடாவில் குடியேற்ற வாசிகளின் எண்ணிக்கையை குறைக்க தீர்மானம்

## அனுமதி வரையறை அடுத்த மாதத்தில்

(ரொரன்டோ)

கனடா எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடிகளை கவனத்திற்கொண்டு அந்நாட்டுக்கு வரும் வெளிநாட்டு குடியேற்றவாசிகளின் எண்ணிக்கையை குறைப்பது தொடர்பில் ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஒட்டாவா நகரில் இடம்பெற்ற அனைத்து கட்சி உறுப்பினர்களையும் உள்ளடக்கிய குடியுரிமை மற்றும் குடியேற்றம் தொடர்பான பாராளுமன்ற சபைக் கூட்டத்தில் குடியேற்ற குடியுரிமை அமைச்சர் ஜேஸன் கென்னி இந்த யோசனையை முன்வைத்துள்ளார்.

கனடாவின் வேலையற்றோர் வீதம் 7.2 ஆக உள்ளது. இந்நிலையில் கனடிய அரசாங்கமானது உள்நாட்டுக்குள் வரும் புதிய குடியேற்றவாசி களின் எண்ணிக்கையின் அளவைக் குறைப்புச் செய்ய எதிர்பார்த்துள்ளதாக ஜேஸன் கென்னி கூறினார்.

கனடா குடியேற்றவாசிகளின் எண்ணிக்கையை குறைப்பதன் காரணமாக கனடாவுக்கு புதிதாக வருபவர்கள் இங்கு வந்திறங்கிய பின்னர் சிரமத்தை எதிர்கொள்ள வேண்டியதில்லை என அவர் தெரிவித்தார்.


எனினும் கனடிய அரசாங்கமானது தமது குறுகிய கால நிலைமைகளுக்காக நீண்ட கால இலக்குகள் அலட்சியப்படுத்தப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் எனத் தெரிவித்த ஜேஸன் கென்னி, கனடிய நீண்ட கால இலக்குகள் தொடர்பில் குடியேற்ற வாசிகள் குறிப்பிடத்தக்க வகிபாகம் ஒன்றை வகிப்பதாக கூறினார்.

கனடாவின் வருடாந்த புதிய குடியேற்ற வாசிகளுக்கான அனுமதிக்கும் அளவானது கடந்த வருடம் 2 இலட்சத்து 47 ஆயிரம் பேரிலிருந்து 2 இலட்சத்து 65 ஆயிரம் பேராக அதிகரிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் பொருளாதாரப் பிரிவில் 1இலட்சத்து 56ஆயிரத்து 600 பேருக்கும் குடும்பப் பிரிவில் 71ஆயிரம் பேருக்கும் மனிதாபிமான அடிப்படையில் 37ஆயிரம் பேருக்கும் கனடாவில் குடியேற அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குடியேற்றவாசிகளுக்கான புதிய அனுமதி வரையறையானது எதிர்வரும் மாதத்தில் தீர்மானிக்கப்படும் என ஜேஸன் கென்னி கூறினார். (ஓ-6)

# நியூசிலாந்து தொடர்களுக்கான இந்திய அணியில் தமிழக வீரர்களுக்கு மீண்டும் வாய்ப்பு



நியூசிலாந்து தொடருக்கான இந்திய டெஸ்ட் அணியில் நான்கு ஆண்டுகளுக்கு பின் மீண்டும் இடம்பிடித்தார் தமிழக வீரர் பாலாஜி. மும்பை வேகப்பந்து வீச்சாளர் தவால் குல்கர்னி அறிமுக வீரராக அணியில் வாய்ப்பு பெற்றுள்ளார். டெஸ்ட்,ஒரு நாள் மற்றும் இருபது-20 என தொடர் முழுமைக்கும் தேர்வாகியுள்ளார் தினேஷ் கார்த்திக்.

நியூசிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ள இந்திய அணி இரண்டு இருபது-20, ஐந்து ஒருநாள் மற்றும் மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்க உள்ளது. இத் தொடருக்கான இந்திய அணி சென்னையில் தேர்வுக் குழு தலைவர் ஸ்ரீகாந்த் தலைமையில் நேற்று முன்தினம் தேர்வு செய்யப்பட்டது. ஒவ்வொரு தொடருக்கும் 16 வீரர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

**பாலாஜிக்கு வாய்ப்பு**

உள்ளூர் தொடர்களில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய தமிழக வீரர் பாலாஜி நான்கு ஆண்டுகளுக்குப் பின் டெஸ்ட் அணியில் வாய்ப்பு பெற்றுள்ளார், இவர் கடந்த 2005ஆம் ஆண்டு பாகிஸ் தானுக்கு எதிராக தனது கடைசி டெஸ்ட் போட்டியில் விளையாடி இருந்தார். அத்துடன் டெஸ்ட் போட்டிகளில் அறிமுக வீரராக அசத்த உள்ளார் மும்பை வேகப் பந்து வீச்சாளரான 20 வயது தவால் குல்கர்னி.

**வழக்கமான அணி**

மற்றபடி இந்திய டெஸ்ட் அணியில் பெரிய மாறுதல்கள் இல்லை. சேவாக்,காம்பீர்,சச்சின், டிராவிட்,லக்ஸ்மன்,யுவராஜ்,தோனி,முரளி விஜய் என வலுவான துடுப்பாட்ப் படை தேர்வு செய்யப்பட்டுள்ளது. காயம் குணமான நிலையில் ஹர்பஜன் சிங் தேர்வாகி உள்ளார்.

இவரு டன் இணைந்து சுழற்பந்து வீச்சில் அசத்த அமித் மிஸ்ரா வாய்ப்பு பெற்றுள்ளார். வேகப்பந்து வீச்சுக்கு சகீர்கான், இஷாந்சர்மா, முனாப் பட்டேல் இடம் பிடித்துள்ளனர். ஒட்டு மொத்தத்தில் 16 பேர் கொண்ட வலுவான அணி தேர்வு செய்யப்பட்டு உள்ளது.

**முழு தொடரிலும் தினேஷ்**

கடந்த ஒரு ஆண்டாக மோசமான ஆட்ட நிலை காரணமாக அணியிலிருந்து நீக்கப் பட்ட தினேஷ் கார்த்திக் டெஸ்ட்,ஒரு நாள் மற்றும் இருபது-20 என தொடர் முழுமைக் கும் தேர்வாகியுள்ளார். சமீப காலமாக உள் நாட்டு தொடரில் அசத்தி வந்த இவர், தனக்கு போட்டியாக இருந்த பார்த்திவ் பட்டேலை பின்னுக்கு தள்ளி இரண்டாவது விக்கெட்காப்பாளராக தனது வாய்ப்பை உறுதிபடுத்தி உள்ளார். நியூசிலாந்து தொடருக்கான ஒரு நாள் அணியில் தினேஸ் கார்த்திக்,ஹர்பஜன்சிங் மட்டுமே கூடுதலாக இடம் பெற்றுள்ளனர். மற்றப்படி சமீபத்தில் இலங்கைக்கு சுற்றுப்பயணம் வந்த வெற்றிக் கூட்டணியே தேர்வாகி உள்ளது. ஹர்பஜன் தேர்வாகி யுள்ளதால் சகலதுறை ரவிந்திர ஜடேஜா,ஒருநாள் தொடரில் வாய்ப்பு பெறவில்லை. இருபது -20 தொடரில் மட்டும் ஜடேஜா இடம்பெற்றுள்ளார்.

இந்திய அணிவருமாறு

**டெஸ்ட் அணி,**

தோனி அணித்தலைவர்,காம்பீர்,சேவாக் துணைத்தலைவர்,சச்சின் டெண்டுல்கர், ராவிட்,லக்ஸ்மனன்,யுவராஜ் சிங்,தினேஷ் கார்த்திக்,சகீர்கான்,இஷாந்சர்மா,முனாப் பட்டேல்,பாலாஜி,ஹர்பஜன் சிங்,அமித் மிஸ்ரா , தவால் குல்கர்னி மற்றும் முரளி விஜய்.

**ஒருநாள் அணி,**

தோனி அணித்தலைவர்,காம்பீர்,சேவாக் துணைத் தலைவர்,சச்சின் டெண்டுல்கர், யுவராஜ் சிங்,ரெய்னா,ரோகித்சர்மா,யூசுப் பதான்,இர்பான் பதான்,தினேஷ் கார்த்திக், ஹர்பஜன் சிங்,பிரக்யான் ஓஜா,பிரவீண் குமார்,சகீர்கான்,இஷாந் சர்மா மற்றும் முனாப் பட்டேல்,.

**இருபது -20 அணி;**

தோனி அணித்தலைவர்,காம்பீர்,சேவாக் துணைத் தலைவர்,யுவராஜ் சிங்,ரெய்னா, தினேஷ் கார்த்திக்,யூசுப் பதான்,இர்பான் பதான், ரோகித் சர்மா, ரவிந்திர ஜடேஜா,பிரவீண் குமார்,சகீர்கான்,இஷாந் சர்மா,முனாப் பட்டேல்,ஹர்பஜன் சிங் மற்றும் பிரக்யான் ஓஜா.

## நெல்லுக்குத் தடை

(டர்பன்)

தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் அன்ரூ நெல் மீண்டும் சர்ச்சையில் சிக்கிக் கொண்டுள்ளார். எதிரணி வீரரை தகாத வார்த்தைகளில் திட்டியது தொடர்பாக இவருக்கு 3 உள்ளூர் போட்டிகளில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவின் ஆக்ரோஷமான பந்துவீச்சாளர் அன்ரூ நெல் களத்தில் அடிக்கடி பிரச்சினை கிளப்புவார்.

சமீபத்தில் நடந்த உள்ளூர் போட்டியில் இவர் ஹைவெல்ட் அணிக்காக விளையாடினார்.

அப்போது எதிரணியான நேடல் டால்பின்ஸ் அணிவீரரை தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார்.

இது தொடர்பாக புகார் தெரிவிக்கப்பட, தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை விசாரணை நடத்தியது.

இதில் நெல் குற்றம் புரிந்துள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து மூன்று உள்ளூர் போட்டிகளில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டுள்ளார்.

(5)

### இங்கிலாந்து-மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான

# இரண்டாவது டெஸ்ட் ரத்து மூன்றாவது போட்டி இன்று

(அன்டிகுவா)

மேற்கிந்தியத்தீவுகள்-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் 10 பந்துகள் மாத்திரம் வீசப்பட்ட நிலையில் ரத்து செய்யப்பட்டது. மேற்கிந்தியத்தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 4 டெஸ்ட்,5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் வெற்றிபெற்று மேற்கிந்தியத்தீவுகள் அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது. இந்நிலையில் இரண்டாவது டெஸ்ட் நேற்று முன்தினம் அன்டிகுவா சேர்வியன் ரிட்சட்ஸ் மைதானத்தில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத் தாடிய இங்கிலாந்து அணி 1.2 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 6 ஓட்டங்களை எடுத்த போது மழை குறுக்கிட ஆட்டம் சுமார் 15 நிமிடங்கள் தடைப் பட்டது.

பின்னர் ஆட்டத்தை தொடர்ந்த இங்கிலாந்து அணி 1.4 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 7 ஓட்டங்களை எடுத்த போது மேற்கிந்தியத்தீவுகள் அணியின் பந்துவீச்சாளர் எட்வோட்ஸ் ஓடிவந்து பந்துவீச மைதானம் சாதகமாகவில்லை என நடுவரிடம் புகார் செய்தார்.

இதனையடுத்து மேற்கிந்தியத்தீவுகள் அணித்தலைவர் ஹயில் இங்கிலாந்து அணித் தலைவர் ஸ்ரொரஸ் கள நடுவர்களான டரல் ஹாப்பர்,டோனி ஹில் மற்றும் ஐ.சி.சி. போட்டி நடுவர் அலன் ஹேர்ஸ்ட் ஆகியோர் நீண்ட நேரம் விவாதித்தனர்.

பின்னர் முதல் நாள் ஆட்டம் கைவிடப்பட்டதாக போட்டி நடுவர் அறிவித்தார். தொடர்ந்து மைதானத்தின் தன்மையை ஆய்வு செய்த நடுவர்கள் மைதானத்தின் வெளிக்களம் வீரர்களுக்கு பாதிப்பை உண்டாக்குமெனக் கருதி இரண்டாவது டெஸ்ட் ரத்து செய்யப்பட்டதாக நடுவர்கள் அறிவித்தனர்.

இதன் மூலம் இந்த டெஸ்ட் குறைந்த பந்துகள் (10 பந்துகள்) வீசப்பட்ட நிலையில் ரத்து செய்யப்பட்ட போட்டி என்ற புதிய சாதனை படைத்தது.

முன்னதாக கடந்த 1998ஆம் ஆண்டு ஜமெக்காவில் நடந்த மேற்கிந்தியத்தீவுகள்-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் 61 பந்துகள் வீசிய நிலையில் கைவிடப்பட்டது இதுவரை சாதனையாகவிருந்தது.

சேர்வியன் ரிச்சாட்ஸ் மைதானத்தில் சர்வதேச தரம் வாய்ந்ததாக இல்லை என்ற காரணத்தால் போட்டி நடுவர் கலன் ஹர்ஸ்ட், இரண்டாவது டெஸ்ட் கைவிடப்பட்ட போட்டியாக அறிவித்தார்.

இதனையடுத்து இத்தொடருக்காக அட்டவணையில் மாற்றம் செய்யப்பட்டது நான்காவது போட்டி கொண்ட தொடர் ஐந்தாவது போட்டியாக மாற்றப்பட்டது. மூன்றாவது டெஸ்ட் இன்று அன்டிகுவாவிலுள்ள அன்டிகுவா ரிகிரி.யேஷன் மைதானத்தில் நடக்கும் என போட்டி நடுவர் அறிவித்தார்.

(5)

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 08





நியூசிலாந்து தொடர் நிறைவடைய இங்கிலாந்து அணி 1993ஆம் ஆண்டு மார்ச்சில் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஒரே ஒரு போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது.

இப் போட்டி மார்ச் 13ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை கொழும்பு சிங்கள விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. அப்போதைய விதிகளின்படி போட்டி 6 நாட்களைக் கொண்டதாகவும் நான்காம் நாள் ஓய்வு நாளாக வழங்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 380 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சிறப்பாக செயற்பட்ட முரளிதரன் 45 ஓவர் கள் பந்து வீசி 12 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 118 ஓட்டங்களை கொடுத்து 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

விசேட அம்சமாக முன்னணித் துடுப்பாட்ட வீரர் சிமித் (128),ஹற்றிங் (18) ஹிக் (68) ஆட்டமிழப்பு செய்த முரளிதரன் இங் கிலாந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை கட்டுப்படுத்த காரணமாக அமைந்தார்.

**பாலா**

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி சகல விக்கெட்டுக்களையுமிழந்து 469 ஓட்டங்களை எடுத்தது.


இதில் முரளிதரன் 153 நிமிடங்கள் களத்தில் துடுப்பெடுத்தாடி 72 பந்துகளை எதிர் கொண்டு 19 ஓட்டங்களை எடுத்ததுடன் ஹசான் திலகரட்ணவுடன் 9ஆவது விக்கெட்டுக்காக 83 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதனாலேயே இலங்கை அணிக்கு முதலாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து அணியை விட 89 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றது.

தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 228 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து இலங்கை அணிக்கு வெற்றி இலக்காக 140 ஓட்டங்களை நிர்ணயித்தது.

(பயணிக்கும்)

# எண் விளையாட்டு- 13




***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்ளில் நிரப்பப்படும் எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு சமமாக வர வேண்டும்.

இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத் தொகை இடப்புறம் கொடுக்கப்பட்டுள்ளது.

1 முதல் 9 வரையான எண்களை பயன்படுத்த வேண்டும். ஆனால் ஒரு வரிசையில் பயன்படுத்திய எண் திரும்ப வரக்கூடாது.

நேற்றைய பகுதிக்கான விடை



# யாழ்ப்பாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பெப்ரவரி 19இல் யாழ்.கச்சேரியில்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளதாக தெரியவருகிறது.

வடக்கு மாகாண விஷேட செயலணி தலைவரும் யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக்களின் தலைவரும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறும். ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் மாவட்ட செயலாளர் க.கணேஷ், வடக்கு மாகாண ஆளுனர் டிக்சன் சரத் சந்திர டெல, வடக்குமாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜா, வடக்குமாகாண அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் யாழ்.மாவட்ட திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக் கூட்டத்தில் யாழ்.மாவட்டத்தில் இவ்வாண்டு மேற்கொள்ளவுள்ள, மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்திகள் மற்றும் நிதி ஒதுக்கீடுகள் தொடர்பில் இக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்படுமென தெரிய வருகிறது.

அத்துடன் மஹிந்த சிந்தையில் குறிப்பிட்ட 'வடக்கின் வசந்தம்' நிதி ஒதுக்கீட்டில் யாழ்.மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள வடக்கு மாகாண விஷேட செயலணித் தலைவரும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை இக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக வடக்கு மாகாண ஆளுநர், பிரதம செயலாளர் மற்றும் அமைச்சுகளின் செயலாளர்கள் அடுத்த சில தினங்களில் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளதாக தெரிய வருகிறது. (ச-5)

# ஜனாதிபதியின் ஆலோசகராக நாராயணமூர்த்தி நியமனம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சர்வதேச தகவல் தொழில்நுட்பத்துறை ஆலோசகராக இன் போசிஸ் நிறுவனத்தின் நாராயணமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

இன்போசிஸ் தகவல் தொழிநுட்ப நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக இருந்தவர் நாராயணமூர்த்தி. தற்போது அந் நிறுவனத்தின் வழிகாட்டியாகவும்முதல் தலைவராகவும் உள்ளார். இவரை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது சர்வதேச தகவல் தொழிநுட்பத்துறை ஆலோசகராக நியமித்துள்ளார்.

இது குறித்து இலங்கை வெளியுறவு செயலர் பாலித கோகன்ன கூறுகையில், இலங்கை அதிபரின் தகவல் தொழில்நுட்ப ஆலோசகராக நியமிக்கப்பட்டதை நாராயணமூர்த்தி ஏற்றுக் கொண்டுள்ளார் என்றார்.

சமீபத்தில் கொழும்பில் தகவல் தொழில்நுட்பத்துறை தொடர்பான விழா நடந்தது. இதில் சிறப்பு விருந்தினராக நாராயணமூர்த்தி கலந்து கொண்டார். விழாவில் பேசிய ஜனாதிபதி கடந்த சில ஆண்டுகளாக தகவல் தொழிநுட்பத்துறையில் இந்தியா வியக்கத்தக்க வளர்ச்சி அடைந்துள்ளது.

இலங்கையும் தகவல் தொழில்நுட்பத் துறையில் வளர்ச்சி அடைய வேண்டும் என்பதற்காக முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாராயணமூர்த்தி இந்திய தகவல் தொழில்நுட்பத் துறையின் தந்தையாக விளங்குகிறார் என்றார். (ச-5)

## விசேட பிரதிநிதி நியமனம்...

விசேட பிரதிநிதி ஒருவரை நியமிப்பதற்கான காரணம் குறித்து பிரிட்டன் வெளிவிவகார அமைச்சு செயலாளர் மிலிபான்ட் வெளிவிவகார அமைச்சர் றோகிதவுக்கு, விளக்கமளித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகமவை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தொலைபேசியில் தொடர்பு கொண்ட பிரித்தானிய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் டேவிட் மிலிபான்ட், தமது விசேட பிரதிநிதியை நிராகரித்தமைக்கான காரணத்தை விளக்குமாறு கோரியுள்ளார்.

இது ஒரு தலைப்பட்சமான நியமனம் என ஏற்கனவே வெளிவிவகார அமைச்சினால் வெளியிடப்பட்ட அறிக்கை குறித்து போகொல்லாகம, மிலிபானுக்கு விளக்கிக் கூறியுள்ளார்.

எனினும் இரு நாடுகளும் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கு இணக்கம் காணப்பட்டதாகத் தெரியவருகிறது.

இலங்கையில் தற்பொழுது நடைபெற்று வரும் மோதல்களை நிறுத்தி, இறுதிச் சமாதானத்தை நிலைநாட்டும் விடயங்களைக் கையாளும் பொருட்டு பிரித்தானியப் பிரதமர் கோர்டன் பிறவுண் விசேட பிரதிநிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் டெஸ் பிறவுணை நியமித்திருந்தார்.

எனினும் இந்த நியமனத்தை இலங்கை அமைச்சரவை நிராகரித்திருந்தது.

பிரித்தானிய அரசாங்கம் இவ்வாறு ஒருவரை நியமிக்கு முன்னர் இலங்கை அரசாங்கத்துடன் கலந்தாலோசித்திருக்க வேண்டுமென அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

இந்த விடயத்தில் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டங்கள் இருந்தாலும், பிரித்தானியா அதனைப் பின்பற்றவில்லையென நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் கூறினார்.

இதேவேளை பிரித்தானிய வெளிவிவகார செயலாளருக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சருக்குமிடையிலான சந்திப்பொன்று நாளை இடம்பெறவுள்ளது. (ச-5)

## சிறப்புத்...

இந்த நடவடிக்கை இலங்கைக்கு கடும் அதிர்ச்சியைக் கொடுத்தது. இங்கிலாந்தின் சிறப்பு தூதரை ஏற்கஇயலாது என்று நிராகரித்து விட்டது.

இது தொடர்பாக இலங்கை வெளியுறவு அமைச்சர் றோகித போகொல்லாகம, இங்கிலாந்து தன்னிச்சையாக சிறப்பு தூதர் என்ற முடிபு எடுத்துள்ளது. இதற்கு இலங்கை அரசு அனுமதிக்காது.

இங்கிலாந்து நாட்டின் செயல் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவதாக உள்ளது என்றார்.

இது குறித்து இங்கிலாந்து அரசு, இலங்கையில் போர் நடைபெறும் பகுதிகளில் எடுக்கப்படும் மனிதாபிமான நடவடிக்கைகள் குறித்து கவனிக்க சிறப்பு பிரதிநிதியை நியமனம் செய்துள்ளது ஒருதலைப்பட்சமானதல்ல என்று தெரிவித்துள்ளது.

இந் நிலையில் விடுதலைப் புலிகள் தமது கருத்தை வெளியிட்டுள்ளனர். (ச-5)




(8)

வெளிவந்துவிட்டது

MA Supra மற்றும் SLAS பரீட்சைகளுக்கான

1. தாபன விதிக்கோவையும் பொதுநிர்வாகமும் (விலை ரூ. 250/=)
(75 வினா+விடை)

2. நிதி ஒழுங்கு விதிகள் (விலை ரூ. 220/=)
(75 வினா+விடை)

தொடர்பு:- 077 6055471
077 6155283

(2259)


# விடுதலைப் புலிகளுக்கு கிழக்குத் திமோரிலிருந்து ஆயுதம்

## சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு கிழக்குத் திமோர் அமைப்பொன்று ஆயுத விநியோகம் செய்து வருவதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கிழக்குத் திமோரைச் சேர்ந்த ப்ரோட்லின் என்ற அமைப்பே இவ்வாறு புலிகளுக்கு ஆயுதங்களை விநியோகம் செய்துள்ளனர்.

முல்லைத்தீவு பிரதேசத்தில் மீட்கப்பட்ட ஆயுதங்களின் மூலம் இது புலனாகியுள்ளது.

இந்த ஆயுதக் கொடுக்கல் வாங்கல் குறித்து பல்வேறு தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் பாதுகாப்பு காரணங்கள் கருதி அவை வெளியிடப்பட மாட்டாதெனவும் பொலிஸ் உயரதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் கிழக்குத் திமோரிலிருந்து ஆயுதக் கப்பலை தருவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது என்று அவ் ஊடகம் தெரிவித்துள்ளது. (ச-5)

# படையினருக்கு ஆதரவாக லண்டனில் ஆர்ப்பாட்டம்

இலங்கையில் விடுதலைப்புலிகளிற்கு எதிராக போர் புரிந்துவரும் படையினரிற்கு ஆதரவு தெரிவித்து லண்டன் மாநகரில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

பெரும்பான்மையாக சிங்கள மக்களைக் கொண்ட பயங்கரவாதத்திற்கு எதிரான அமைப்பு என்ற அமைப்பினால் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

விடுதலைப்புலிகளிற்கு எதிரான போர் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் இந்தப் போரில் பொதுமக்கள் பாதிக்கப்படுவதற்கு விடுதலைப்புலிகளே காரணம் என்றும் அந்த அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (ச-14)

## வன்னியில் நேற்று...

சுற்றயல் பகுதிகளில் நேற்று விமானப் படையினர் பொதுமக்களை இலக்கு வைத்து குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இதில் 12 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

அத்துடன் தேவிபுரம், வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு பகுதிகளில் பொதுமக்கள் மீது நேற்று சனிக்கிழமை படையினர் செறிவான எறிகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இதில் 36 தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 98 பேர் படுகாயங்களுக்கும், எரிகாயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர்.

மக்கள் பாதுகாப்பு வலய பகுதியான முள்ளிவாய்க்கால் பகுதியில் நேற்றுக்காலை 10 மணியளவில் விமானப் படை குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளது.

இதில் 3 தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 5 பேர் காயமடைந்துள்ளனர் என வைத்தியசாலை வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன. (ச-5)

## பிரி.பிரதமரின்...

அதிர்ச்சியில் இருக்கிறார்கள் ஈழ ஆதரவாளர்கள்.

இதேவேளை இந்திய ஜார்க்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த வாலிபர் ஒருவர் நேற்று இந்தியப் பிரதமர் அலுவலகம் அருகே தீ வைத்து தற்கொலைக்கு முயன்றார்.

பலத்த காயமடைந்த அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஜார்க்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த அபிஷேக் (வயது 32). இவர் டில்லியில் அதிக பாதுகாப்பு நிறைந்த பிரதமர் அலுவலகம் அருகே நேற்று மாலை 3.30 மணியளவில் உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துக் கொண்டார்.

உடன் அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் தீயை அணைக்க ஏற்பாடு செய்தனர்.

அதற்குள் 70 சதவீத தீக்காயமடைந்த அவர் ஆர்.எம்.எல். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-5)

## வார்த்தைகளால் வர்ணிக்க...

வரப்பட்டிருக்கிறார்கள். 10க்கும் மேற்பட்ட இறந்தவர்களின் உடல்களும் கொண்டு வரப்பட்டுள்ளன.

ஷெல்கள் தொடர்ந்தும் ஏவப்பட்டுக் கொண்டிருப்பதால் நோயாளர்களை வைத்தியசாலைக்கு கொண்டு வருவதில் பாரிய சிரமங்கள் எதிநோக்கப்படுகின்றன.

தற்காலிகமாக ஒரு பாடசாலைக்கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ள வைத்தியசாலையில் காயமடைந்தவர்கள், சிறுவர்கள், கர்ப்பிணிப் பெண்கள் ஊழியர்கள் என 400க்கும் மேற்பட்டோர் தங்கியுள்ளார்கள்.

இடப்பற்றாக்குறையே பெரிதும் நெருக்கடியைத் தருகிறது. நோயாளர்களைப் படுக்க வைக்கக் கூட இடமில்லை.

வகுப்பறை ஒன்றையே சத்திர சிகிச்சைக் கூடமாக ஒழுங்கு செய்துள்ளோம். வைத்தியசாலை முற்றத்தில், நிலத்தில், மரத்தின் கீழ் என நோயாளர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

நீர்வசதி, மின்சார வசதியில்லை. நான் அறிந்தளவில் இப்படியான ஒரு இக்கட்டான-கடினமான சூழ்நிலையை அனுபவிக்கவில்லை. வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாத மனித அவலம் இங்கு நடந்து கொண்டிருக்கின்றது.

கடந்த இரண்டு நாட்களாக மருந்து பொருட்கள் வந்து சேரவில்லை சத்திர சிகிச்சையின் முன்பு கொடுக்கப்படுகின்ற மயக்க மருந்தும் சொற்ப அளவிலேயே உள்ளது.

இது தொடர்பாக சம்பந்தபட்டவர்களுக்கு அறிவித்துள்ளோம். மருந்து இல்லாமல் இறந்து விடுகின்ற ஒரு இக்கட்டான நிலை கூட இங்கு ஏற்பட்டுள்ளது எனக்கூறிய அவர், அங்கிருந்து நோயாளர்களை வெளியேற்ற தொடர்ந்தும் கப்பல் சேவை நடத்தப்பட வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்தார். (ச-14)

## இலங்கைக்கு ஐ.நா. படையை...

இலங்கையில் பொதுமக்கள் படுகொலை செய்யப்படுவதைத் தடுப்பதற்கு ஐக்கிய நடுகள் சபையின் அமைதிகாக்கும் படை அங்கு அனுப்பப்படவேண்டிய இக்கட்டான சூழ்நிலை தோன்றியுள்ளதாக ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தின் தெற்காசியப் பிராந்தியத்துக்கான நாடாளுமன்றக் குழுவின் தலைவர் றொபேர்ட் இவான்சே இவ்வாறு கூறியுள்ளார்.

கூடிய விரைவில் இலங்கைக்கு அமைதி காக்கும் படையினர் அனுப்பப்படவேண்டுமென இவான்சே ஐ.நா.செயலாளர் நாயகம் பான்கீ மூனிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கால் மில்லியன் மக்கள் மோதல்களில் மாத்திரம் சிக்குண்டிருக்கவில்லை. இரத்த ஆறுக்குள் சிக்குண்டுள்ளனர் என்பதை அனைத்து ஆதாரங்களும் நிரூபிக்கின்றன என பிரித்தானியாவைச் சேர்ந்த இவான்ஸ் கூறினார்.

தமிழ் மக்கள் அடக்கப்பட்டிருப்பதுடன் அச்சத்தில் வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலைமை மாற்றியமைக்கப்பட வேண்டும்.

இலங்கை இராணுவத் தரப்பினர் தொடர்பாகவும் முகாம்கள் தொடர்பாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. அதே நேரம் அவற்றுக்குச் சமமாக விடுதலைப் புலிகளும் தமது கட்டுப்பாட்டிலிருந்து செல்லும் மக்கள் மீது தாக்குதல் நடத்துவதாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

சர்வதேச சமூகம் எதிர்வரும் நாட்களில் உடனடியாகச் செயற்படாவிட்டால் 2 இலட்சத்து 50 ஆயிரம் மக்களின் நிலைமை மோசமடைந்துவிடும் என அவர்மேலும் கூறியுள்ளார்.

அத்துடன் இலங்கையில் மோசமடைந்திருக்கும் நிலை தொடர்பாக வெளி விவகார அமைச்சர் மார்க் மலொக் பிறவுண் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார ஆணையாளர் பெரேரோ வொல்னருடன் பேச்சு வார்த்தை நடத்தியிருப்பதாக அவர் குறிப்பிட்டார். (ச-5)


விநியோகஸ்தர்கள் தேவை

பத்திரிகை விநியோகத்திற்கு ஆட்கள் தேவை, உரிய ஆவணங்களுடன் சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் நேரில் வரவும்.

*குறிப்பு:- வலம்புரி அலுவலகத்திற்கு 5 கிலோமீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்களும் இரவில் தங்குவதற்கு வசதியுடையவர்களும் மட்டும் நேரில் வரவும்.*

-நிர்வாகம்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.02.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.